JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர்: 12 | இதழ்: 5 | ஜூலை 2021 | ஆண்டு சந்தா ₹ 100/-

## யெகோவா கிபோர்

### பராக்கிரமமுள்ள கர்த்தர்



நமக்கு துணை நின்று யுத்தம் செய்யும்.
யெகோவா கிபோர் (பராக்கிரமமுள்ள கர்த்தர்)
அவரே நம் பாதுகாப்பின் பட்டயம்.

# INDEX


யெகோவா கிபோர்
(பராக்கிரமமுள்ள கர்த்தர்)

04 என்னை பண்படுத்தி பயன்படுத்தியவர்
10 கசப்பான அனுபவம்
20 எசேக்கியாவின் உண்மை!
28 பாதுகாப்பு வளையம்
32 இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாகுங்கள்!


**இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!**

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats app மூலமாகவோ **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்

## 30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?

வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள்

**சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!**

Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.

## சந்தா விவரம்

**ஆண்டுக்கு ₹100/-**
**3 ஆண்டுக்கு ₹200/-**
**ஆயுள் சந்தா ₹1,000/-**

| | |
|---|---|
| A/c. Name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : 054100710400515 |
| BANK | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : 000054 |
| IFS CODE | : TMBL0000054 |
| MICR CODE | : 627060021 |
| SWIFT CODE | : TMBLINBBTUT |


**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in



**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் **இணை ஆசிரியர்:** அவினாஷ் **ஆசிரியர் குழு:** ரெக்ஸ் கிளமென்ட் | ஜிஷ்யா | லீனா அவினாஷ் ரெபேக்கா | ரேச்சல் | கிளாடிஸ் | ரவி | சுமா | கெத்சி | காலேப் | வயலா | சதீஷ் | ரேச்சல் செல்வகுமார்
**வடிவமைப்பு:** ஜாஷ்வா | **நிர்வாகம்:** பெனீட்டா | ஜெயா






## அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!

மே மாதம் இஸ்ரவேல் தேசத்துக்கும் பாலஸ்தீன தேசத்திற்கும் இடையே நடந்த ஒரு பெரிய யுத்தம் முழு உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்தது. மே 10 அன்று பாலஸ்தீனம் தன்னுடைய முதலாவது தாக்குதலை இஸ்ரவேலுக்கு நேராக செலுத்தியது. மேலும் காசாவில் இருந்து புறப்பட்ட 500க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை, இஸ்ரேல் வானத்திலேயே தூள்தூளாக அழித்து வெற்றி பெற்றது. பாலஸ்தீனா இஸ்ரேல் மேல் தொடுத்த ஏவுகணைகளில் 90%, தங்களை தாக்காதபடி **IRON Dome System** என்ற ஒரு கட்டமைப்பை இஸ்ரேல் கையாண்டு தன் தேசத்தை பாதுகாத்துக் கொண்டது. இஸ்ரவேலுக்கு பாதுகாப்பு என்பது அவர்களுடைய ஞானம், படைபலம், ஆராய்ச்சி என்று அவர்கள் யோசித்தாலும்...

**இஸ்ரவேலை காக்கும் ஒரு தேவன் உண்டு,**
**அவர் பராக்கிரமமுள்ள கர்த்தர், அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே.**

வேதத்தில் சொல்லப்பட்ட பல யுத்தங்களில், தேவன் இஸ்ரவேலுக்காக முன் நின்று யுத்தம் செய்து இஸ்ரவேலை காத்துள்ளார். கிபியோனை எதிர்த்து 5 ராஜாக்கள் யுத்தத்திற்கு வந்தபோது யோசுவா ஒருமுறை அவர்களுக்கு உதவ, தேவனால் அனுப்பப்பட்டு, அந்த ஐந்து ராஜாக்களையும் முறியடித்தான். காரணம், கர்த்தர் யோசுவாவுக்கு வாக்குக்கொடுத்தார். **"...அவர்களுக்குப் பயப்படாயாக; உன் கைகளில் அவர்களை ஒப்புக்கொடுத்தேன்; அவர்களில் ஒருவரும் உனக்கு முன்பாக நிற்பதில்லை"** (யோசுவா 10:8). யோசுவாவின் பட்டயத்தினால் கொன்றவர்களைப் பார்க்கிலும் **கர்த்தர் வானத்திலிருந்து** அனுப்பிய **பெரிய கல் மழையினால்** செத்தவர்கள் அதிகம். **காரணம், கர்த்தர் யுத்தத்தில் பராக்கிரமம்** உள்ளவராமே.

அன்றைக்கு மாத்திரமல்ல இன்றைக்கும் கர்த்தர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ளவராக இருக்கிறார் என்று சொன்னால் மிகையாகாது. நான் உன்னோடு கூட இருக்கிறேன் நானே யுத்தத்தை நடத்துவேன், நான் உனக்கு வெற்றியை கொடுப்பேன் என்று அன்றைக்குக் கர்த்தர் யோசுவாவுக்கு வாக்கு கொடுத்தார். கர்த்தர் அன்றைக்கு இஸ்ரவேலுக்கு கொடுத்த வாக்கை இன்றைக்கும் நிறைவேற்றிக் கொண்டுதான் இருக்கிறார். ஆனால் இன்றைக்கும் இஸ்ரவேலில் ஒரு கூட்ட ஜனம் இயேசுவை விசுவாசிக்கவில்லை. அவர்கள் வெற்றிக்கு காரணம் அவர்களுடைய ஞானம், விஞ்ஞானம், புயபலம், படைபலம் மட்டுமே என்று யோசிக்கிறார்கள் **ஆனால் கர்த்தரின் கரம் இருப்பதை இன்னும் அந்த தேசம் அறியவில்லை.**

இதேபோல் தான் நாமும் அநேக நேரம் நமது சொந்த பெலத்தில் ஓடிக் கொண்டிருக்கிறோம் என்று நினைக்கிறோம். அது அல்ல, கர்த்தருடைய ஓங்கின புயமே நம்மை தாங்கிக் கொண்டு இருக்கிறது.

**உங்களை காக்க (யெகோவா கிபோர்) பராக்கிரமமுள்ள கர்த்தராக இருக்கிறார்.**
**இன்றைக்கு உங்களின் பாதுகாப்பின் அடையாளம் எது?**

**IAM (LORD) DOME OR IRON DOME**

கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்



சாட்சி: ஜிஷ்யா

# என்னை பண்படுத்தி பயன்படுத்தியவர்



**ஒருபக்கம் வியாதி, ஒரு பக்கம் தனிமை, கேலிப் பேச்சு இப்படிப்பட்டதான சூழ்நிலையில் இருந்த சகோதரி ஜெயபிரபா எப்படி Outgoing Student-ஆக மாறி, இன்றைக்கு Best English Lecturerராக இருக்கும் அவரிடத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன? அந்த மாற்றங்கள் எப்படி நடந்தது என்று அவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்வோமா?**

சகோதரி: ஜெயபிரபா

### உங்கடைய சிறு பிராயத்தைப் பற்றி சொல்லுங்களேன்?

என்னுடைய பெயர் ஜெயபிரபா என்கின்ற ப்ரீசியஸ் குளோரி. நான் ஒரு நடுத்தர குடும்பத்தில் திரு. ஜோஸ்வா சண்முகம், திருமதி. பியூலா மணிமேகலை தம்பதியருக்கு இரண்டாவது மகளாக திருவாரூர் மாவட்டத்தில் பிறந்தேன். என் தகப்பனார் ராணுவத்தில் பணிபுரிந்து விட்டு, தற் போது கிராம அஞ்சல் அலுவலராக பணிபுரிகிறார். இரண்டு திருச்சபைகளுக்கு போதகராகவும் இருக்கிறார். என் தாய் ஓய்வுபெற்ற செவிலியர். எனக்கு எஸ்தர் எப்சிபா, இவாஞ்சலின் ஜெயா கிருபா என்ற இரு சகோதரிகள் உள்ளனர்.



சகோதரி பிரபாவின் குடும்பம்

### அப்படின்னா நீங்கள் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறக்கவில்லை... எப்படி இயேசுவை அறிந்து கொண்டீர்கள்?

நான் ஒரு தீவிர இந்து குடும்பத்தில் பிறந்தேன். என்னுடைய ஒன்றாவது வயதில் என் தந்தை உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் என் பள்ளி ஆசிரியை விமலா அவர்கள் சுவிசேஷம் சொன்னதின் நிமித்தம் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றார்கள். ஒரு அறையில் என் தந்தை ஜெபித்துக் கொண்டு இருக்க, மறு அறையில் என் தாய் இந்து தெய்வங்களை வைத்து வணங்கிக் கொண்டிருப்பார்கள். அந்தச் சிறு வயதில் ஃபாதர் பெர்க்மான்ஸ் அவர்களின் பாடல்களால் மிகவும் கவர்ந்து இழுக்கப்பட்டு அப்பாவுடன் அமர்ந்து நானும் என் சகோதரியும் ஜெபம் செய்வோம் .

### அப்பா வியாதியிலிருந்து சுகம் கிடைத்ததால் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள்.. அம்மா எப்படி இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள்?

நான் ஒன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது, என் தாய் நுரையீரல் நோயினால் பாதிக்கப்பட்டு மரணத்தின் விளிம்பிற்கு சென்றார்கள். என் தாயின் வைத்தியத்திற்காக பல மருத்துவமனைகளில் ஏறி இறங்கினார்கள். மூக்கிலும் வாயிலும் ரத்தம் வருவதை பார்க்கும் போது என் இதயம் நடுநடுங்கும். என் தாயின் வியாதி சுகப்படுத்த முடியாத நிலையில் தந்தை மற்றும் திருச்சபை போதகரின் ஜெபத்தினால் ஒரே நாள் இரவில் வியாதி மறைந்து போனது. அதன்பிறகு என் தாயும் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுத்து கிறிஸ்துவின் பிள்ளையாக மாறினார்கள்.

### சூப்பர்... இப்போது முழு குடும்பமும் இயேசுவை ஏற்றுக்கொண்டீர்கள்... சரி உங்களுடைய படிப்பு பற்றி சொல்லுங்களேன்?

நான் மயிலாடுதுறையில் உள்ள ஒரு பள்ளி விடுதியில் சேர்ந்து 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்தேன். சுதந்திரமாக துள்ளித் திரிந்து கொண்டிருந்த சிறு பருவம், ஜெயில் போல் அமைக்கப்பட்ட பெரிய சுவர்களுக்குள்,

இரவு பத்து மணிக்கு படுத்து காலை 4 மணிக்கு எழுந்து, குளிரான நீரில் அரை மணி நேரத்திற்குள்ளாக குளித்து துணி துவைத்து, காலை படிப்பதற்கு (Study) செல்ல வேண்டும் ஒரு நிமிடம் தாமதமாக வந்தாலும் கை கால் முகம் என்று பாராமல் அடி விழும், அதுமட்டுமல்லாமல் விடுதியில் வழங்கப்படும் பிற வேலைகளையும் செய்துவிட்டு, கஞ்சி சாதம் ஊறுகாயை சாப்பிட்டுவிட்டு, மூன்றாவது மாடிக்கு மூச்சுவாங்க ஓடி வகுப்பறைக்குள் செல்ல வேண்டும். இந்தப் புதிய முறையான வாழ்க்கை சற்று வலிகள் நிறைந்ததாக இருந்தது.



எனது 7ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை ஒரு சிறிய பலவீனத்தால் தாக்கப்பட்டேன். வகுப்பில் அடிக்கடி தூங்குவேன் இதனால் என்னுடன் பயிலும் சக மாணவர்களின் கேலிப் பேச்சுக்கும், கிண்டலுக்கும் உள்ளானேன். சாக்லேட், ஊறுகாய் சாப்பிட்டு என் தூக்கத்தை கட்டுப்படுத்த நினைத்தாலும், என்னால் தூக்கத்தை கட்டுப்படுத்த முடியாது. ஆசிரியர் சக மாணவர்கள் முன் புத்தகங்களை முகத்தில் வீசி அடிக்கும் போது எனக்கு அவமானமாக இருக்கும். மாணவர்கள் கேலி கிண்டல் செய்வார்கள். இதனால் சாப்பிட போகாமல் பசியோடு இருந்த நாட்கள் தான் அதிகம். 12-ஆம் வகுப்பு படிக்கும்போது தூக்கத்தை கட்டுப்படுத்த Pepper, Chilly powder வாயில் போட்டுக் கொள்ளுவேன்.

பள்ளியில் 5 Rank-க்குள் வாங்குவதாலும், படிப்பில் அதிக ஆர்வம் இருப்பதையும் கவனித்த என் விலங்கியல் ஆசிரியை திருமதி. மங்கை இரத்த சிவப்பணுக்களின் எண்ணிக்கை குறைபாட்டால் தூக்கம் வருகிறது என்பதை தெளிவாக கூறி, சிகிச்சை எடுக்க அறிவுரை கூறினார்கள். நானும் சிகிச்சை பெற்றதும், பெலவீனம் என்னை விட்டு நீங்கியது.

என் தாய் செவிலியராக இருந்ததால் அவர்களின் அயராத சேவை, நோயாளிகளிடம் அவர்கள் அன்பாக பேசுவதை பார்த்து ஈர்க்கப்பட்டு நான் ஒரு இருதய அறுவை சிகிச்சை மருத்துவராக வேண்டும் என்று கடினமாக படிக்க ஆரம்பித்தேன்.

### இவ்வளவு பாடுகள் மத்தியிலும் பள்ளிப் படிப்பை படித்து முடித்தீர்கள்... ஆண்டவருக்கு உங்களுக்குமுள்ள தொடர்பு எப்படி இருந்தது?

அவ்வளவு நாளாக கடமை கிறிஸ்தவளாக இருந்த நான் தேவனோடு நெருங்க ஆரம்பித்தேன். சாப்பிடாமல், தூங்காமல் வேதத்தை சுவைக்க ஆரம்பித்தேன். 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் அதிகம் தேவனைப் பற்றிக் கொள்ள ஆரம்பித்தேன். என் சக மாணவர்களுக்கும் சுவிசேஷம் சொல்ல ஆரம்பித்தேன். ஒரு ஜெபக்குழு ஆரம்பித்து சுமார் 200 மாணவர்களாக ஜெபிக்க ஆரம்பித்தோம்.

### நீங்கள் விடுதியில் படித்தேன் என்று சொன்னீர்கள்... உங்களுடைய விடுதி வாழ்க்கை எப்படி இருந்தது?

விடுதியில் சிலசமயம் பசியோடு இருக்கும்போது, ஒரு மாங்காய் கிடைக்காதா என்ற ஏக்கத்தோடு மரத்தை பார்த்துக் கொண்டும், கேன்டீனில் தின்பண்டங்கள் வாங்கி சாப்பிடும் மாணவிகளை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டும் இருந்த நாட்கள் அதிகம். சிலசமயம் குடிப்பதற்கு தண்ணீர் கூட இல்லாமல் இருந்த நாட்களும் உண்டு.

பசி ஒரு பக்கம், பெற்றோர் உடன் இல்லாத ஏக்கம் ஒரு பக்கம் இருந்தது. விடுதியில் போதிய வசதி இல்லாமல் இருந்தாலும், நன்றாக பாடம் நடத்தும் ஆசிரியர்கள் இருந்ததால், "பல்லை கடித்துக்கொண்டு பள்ளிப்படிப்பை முடித்துவிடு" என என் தந்தை எனக்கு கூறிய வார்த்தை, இரவு பகல் கண்விழித்து படிக்க இன்னும் அதிகமாக உழைக்க என்னை உந்தித் தள்ளியது. என் பென்சில் பாக்ஸ், எனது புத்தகம் என அனைத்திலும் மருத்துவர்கள் படம் ஒட்டி வைத்திருப்பேன். இப்படியாக பள்ளிப்படிப்பை நல்ல மதிப்பெண்களோடு முடித்தேன்.

### மருத்துவம் படிக்க இடம் கிடைத்ததா? மருத்துவம் படித்தீர்களா?

பல் மருத்துவர், கால்நடை மருத்துவர் என மருத்துவ படிப்புக்கான அனைத்து வாய்ப்புகளும் எனக்கு கிடைத்தது. ஆனால் என் தந்தை இது பெண்களுக்கு பாதுகாப்பான வேலை இல்லை என நினைத்ததால்,

என்னை ஆங்கில இலக்கியத்தில் சேர்த்து விட்டார். ஆங்கிலத்தின் மீது பிரியம் இருப்பினும், சரியான முறையில் என் சந்தேகங்கள் தீர்க்கப்படாததினால் ஆங்கிலத்தின் மீது ஒரு விதமான வெறுப்பு இருந்தது. நான் கல்லூரியில் வெறுப்புடனேயே வகுப்பறையில் அமர்ந்திருப்பேன், என் பேராசிரியர்கள் பேசிய ஆங்கிலத்தைப் புரிந்து கொள்வதற்கு பல மாதங்கள் ஆனது. பாடங்கள் புரியவில்லை என அழுதுக்கொண்டிருந்த போது, என் தந்தை "இயேசப்பாவிடம் கேள், அவர் உனக்கு சொல்லித் தருவார்" என கூறினார். வீட்டில் ஒரு மூலையில் என்னுடைய படிக்கும் இடத்தை உருவாக்கி ஜெபிப்பது, வேதம் வாசிப்பது, கல்லூரிப் பாடங்களைப் படிப்பது எனது வேலையாக இருந்தது. இரவு எப்போதெல்லாம் கண் விழிக்கிறேனோ அப்போதெல்லாம் வேதத்தையும், கல்லூரிப் பாடங்களையும் படிப்பேன். ஆங்கிலத்தை சரளமாக பேச, படிக்க கர்த்தர் ஞானத்தைக் கொடுத்தார். கல்லூரி முடிக்கும் போது என்னுடன் படித்த 1300 மாணவிகளில் நான் "Best Outgoing Student Award", Best Performer Award", "Sports Player Award" என எல்லாவற்றையும் என்னை கேலி செய்தவர்களின் கண்களுக்கு முன்பாக வாங்க தேவன் உதவி செய்தார்.



**ஒரு வழியாக ஆங்கிலம் கற்றுக் கொண்டீர்கள்... Outgoing Student-ஆக இருந்தீர்கள்... தொடர்ந்து முதுகலை படிப்பு படித்தீர்களா?**

ஆம்... என் கல்லூரி முதுகலை படிப்பிற்காக Central University of Tamilnadu-ல் பல போட்டிகளுக்கு மத்தியில் நுழைவுத்தேர்வு எழுதி சீட் கிடைக்க தேவன் எனக்கு உதவி செய்தார். கல்லூரியில் காலடி எடுத்து வைத்த முதல் நாளே என்னுடைய மூத்த பேராசிரியர் தமிழ்நாட்டில் படித்து வந்திருக்கும் மாணவிகளால் இங்கே படிக்க முடியாது உங்களுக்கு இந்த பல்கலைக்கழகத்தில் படிக்க அவ்வளவு திறமை கிடையாது, அதனால் டீசி வாங்கி கொண்டு இடத்தை காலி செய்யுங்கள் என்று கூறினார். தத்தித்தத்தி மேல் எழும்பி நின்ற என்னை அப்படியே கீழே சாய்த்தது போல் இருந்தது. ஆனாலும் இம்மட்டும் கைவிடா தேவன் இனியும் கைவிடமாட்டார் என்ற விசுவாசம் எனக்குள் இருந்தது. மூத்த பேராசிரியரின் வாக்குப்படியே ஒரு வருடம் முடிந்ததும் என்னுடன் படித்த 20 மாணவர்கள் படிக்க முடியாமல் டீசி வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள், ஆனாலும் என் பரம ஆசிரியராகிய என் தேவன் அனுதினமும் எனக்கு சொல்லிக் கொடுத்து ஒரு அரியர் கூட இல்லாமல் முதுகலை படிப்பை நல்ல முறையில் படித்து முடித்து பட்டம் வாங்க உதவி செய்தார்.

**முதுகலைப்பட்டம் வாங்கினீர்கள்... அதன்பிறகு வேலை செய்தீர்களா? தொடர்ந்து மேற்படிப்பு படித்தீர்களா?**

ஆசிரியர் பயிற்சி படிப்பிற்கு தஞ்சாவூரிலுள்ள Bon Secours College of Education சேர்ந்தேன். சிறுவயதிலிருந்தே அன்பிற்காக ஏங்கிக் கொண்டிருந்த எனக்கு அநேக தோழிகள் கிடைத்ததும் அவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தேன்.

Photography, Modeling, Bike Race, Fashion Show, Short film acting, Sports, Social Networks இவைகள் என் பொழுதுபோக்குகளாக மாறின. தேவனை தேடுவதையும் வேத வாசிப்பையும் கடமைக்காக செய்ய ஆரம்பித்தேன். என் ஆசிரியர் பயிற்சி இறுதியாண்டில் என் சக தோழிகளுக்கும் எனக்கும் ஏற்பட்ட சிறு மன வருத்தத்தால் மிகவும் உடைக்கப்பட்ட சூழ்நிலையில், தாய் தன் பாலகனை மறந்தாலும் நான் உன்னை மறக்க மாட்டேன், உனக்காக நான் இருக்கிறேன் என்ற வார்த்தை என்னைத் தேற்றியது. இனிமேல் வாழ்ந்தால் இயேசுவுக்காக கடைசி மட்டும் வாழ்வேன் என்று அன்றைக்கு முடிவு எடுத்தேன்.

வகுப்பறையிலும் போட்டிகளிலும் என் திறமையை பார்த்த என் பேராசிரியர்கள் நான் ஒரு சிபிஎஸ்இ பள்ளி அல்லது இன்டர்நேஷனல் பள்ளியில் பயின்று இருக்க வேண்டுமென நினைத்துக் கொண்டார்கள். நான் சாதாரணமாக

அரசு உதவிபெறும் பள்ளியில் தமிழ் வழிக் கல்வி பயின்றேன் என்பதை சொல்லியும் என் பேராசிரியர்கள் நம்பவே இல்லை. அந்த ஆண்டின் இறுதியில் அதிக மதிப்பெண்களுடன் Distinction-ல் பாஸ் செய்து கேம்பஸ் இன்டர்வியூவில் முதல் மாணவியாக தேர்வு பெற்று, ஏற்காட்டில் இருக்கும் Montfort Community பள்ளியில் மேல்நிலை வகுப்பிற்கு ஆங்கில ஆசிரியையாக நல்ல சம்பளத்தில் பணிபுரிய தேவன் கிருபை செய்தார். அதே நேரத்தில், ஆதரவற்ற அனாதை சிறுவர்கள், Juvenile Delinquent என சொல்லப்படுகிற குற்ற சிறார்கள் மத்தியில் பணிபுரியவும் தேவன் கிருபை செய்தார். திருவாரூரிலுள்ள ஒரு தனியார் கல்லூரியில் விரிவுரையாளராகவும், மாணவிகளை கேம்பஸ் இண்டர்வியூவுக்கு தயார் செய்யும் ஆங்கில பயிற்றுவிப்பாளராகவும் பணியாற்றினேன்.



### வேலையும் பார்த்தீர்கள்... நன்றாக சம்பாதித்தீர்கள்... இவ்வளவு செய்த நீங்கள் ஆண்டவருக்காக என்ன செய்தீர்கள்?

நான் பணிபுரிந்த கல்லூரி மாணவிகளுக்கு சுவிசேஷத்தை அறிவித்து ஜெபிப்பேன். பேருந்துகளிலும், ரயில்களிலும் மக்களைப் பார்க்கும்போது, ஒருவிதமான ஆத்தும பாரத்தினால் நிரம்பி எல்லாருக்காகவும் ஜெபிக்க ஆரம்பித்தேன். பயண நேரங்களில் எப்படியாவது மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்து விடுவேன். திருநங்கைகள் மத்தியில் ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். கொரோனா முதல் அலை Lock Down நேரத்தில் திருமதி. ஐடா பிரியதர்ஷினி மற்றும் ஜோதி எமிமா ஆகியோருடன் இணைந்து தேசத்திற்காக ஜெபிக்க ஆரம்பித்தோம். தினமும் காலை ஒரு மணி நேரம் தேசத்திற்காகவும். வாரம்தோறும் வெள்ளிக்கிழமை இரவு 10 மணி முதல் 2 மணிவரை எழுப்புதலுக்காக குழுவாக ஜெபித்து வருகிறோம். ஒருவேளை நான் மருத்துவராகி இருந்தால் ஜனங்களின் உடல் அளவு காயங்களை மட்டுமே ஆற்றி இருக்க முடியும், தேவன் என்னை ஒரு ஆசிரியராக மாற்றியதால் ஜனங்களின் ஆத்தும காயங்களை மாற்ற தேவன் கிருபை செய்தார். ஞானிகளை வெட்கப்படுத்தும்படி பைத்தியமான என்னைத் தெரிந்துகொண்டு உயர் ஸ்தலங்களில் அமரவைத்து என்னைப் போன்று கஷ்டப்படும் மாணவர்களுக்கு உதவ தேவன் கிருபை செய்தார்.



சகோதரி ஜெயபிரபா ஜெபக்குழுவினரோடு..

### வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

இதைப் படித்துக் கொண்டிருக்கும் அன்பு உள்ளங்களே, உங்களுக்கு எதுவும் தெரியவில்லை என்று எள்ளி நகையாடுவார்கள். அதே விஷயத்தில் தேவன் உங்களை உயர்த்தி உங்கள் எதிரிகளை தலைகுனிய செய்வார். தாவீதின் குடும்பத்தில் ராணுவ வீரர்களான அவர்கள் சகோதரர்களை தேவன் தெரிந்து கொள்ளவில்லை, மாறாக ஆடுகளின் பின்னே சுற்றித்திரிந்த சாதாரண தாவீதைத் தெரிந்து கொண்டார். நீங்கள் ஒரு சாதாரணமானவர்களாக இருக்கலாம், ஆனால் தேவன் உங்களை தெரிந்து கொண்டு அசாத்தியமானவர்களாக மாற்ற வல்லவராயிருக்கிறார். நீங்கள் இடைவிடாமல் ஜெபித்து வேதத்தை தியானித்து உங்கள் முழு வாழ்க்கையையும் தேவனுடைய கரத்தில் கொடுத்து பொறுமையாக காத்திருங்கள். ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்துவார். நீங்கள் தேவனோடு இருக்கும் பொழுது தேவன் உங்களோடு இருப்பார்.

**அன்பான வாலிபர்களே! ஜெயப்பிரபாவின் வாழ்க்கையில் எவ்வளவோ கஷ்டங்கள், பாடுகள் மத்தியிலும் ஆண்டவரை உறுதியாகப் பிடித்துக் கொண்டு கர்த்தருக்கென்று வைராக்கியமாக இருந்ததால், அநேகர் மத்தியில் உயர்த்தி வைத்திருக்கிறார். இன்றைக்கு நீங்கள்கூட இப்படிப்பட்டதான சூழ்நிலையில் காணப்படுகிறீர்களா? சோர்ந்து போகாதீர்கள் ஜெயப்பிரபாவோடு இருந்த தேவன் உங்களோடு இருக்கிறார்! ●**



# பராக்கிரமமுள்ள தேவன்!

பிரியமானவர்களே! ஜூலை மாதத்தில் இந்த செய்தியின் மூலம் உங்களை சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். ஒவ்வொரு மாதமும் இந்த முகப்பு செய்தி உங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாகவும் உற்சாகம் தரக்கூடியதாகவும் இருப்பதற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். உங்களுக்காக மிகுந்த பாரத்தோடும் ஜெபத்தோடும் இச்செய்தியை ஆண்டவரின் கிருபையால் எழுதியுள்ளேன். இது நிச்சயம் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும். தற்போது உங்களை சுற்றி இருக்கிற சூழ்நிலைகளைப் பார்த்து சோர்ந்து போகாதீர்கள். கர்த்தர் என்னோடு இல்லை என்றும், எனக்கு அற்புதங்களைச் செய்ய மாட்டார் என்றும் உங்களுக்குள் அவிசுவாசமான வார்த்தைகளை சொல்லாதிருங்கள். **“தேவனாலே பராக்கிரமம் செய்வோம்; அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப் போடுவார்” (சங். 60:12)** என்று விசுவாசத்தோடு இருங்கள். நம்முடைய ஆண்டவர் பராக்கிரமமுள்ள தேவன் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

புத்தமதம் பிரதானமாக இருந்ததால் அம்மதம் அழிந்து விடக்கூடாது என்பதற்காக வேறு எந்த மதத்தைச் சார்ந்த மிஷனெரிகள் திபெத்திற்குள் நுழையக்கூடாது என்ற கடுமையான சட்டம் திபெத் நாட்டில் இருந்தது. 1908ஆம் ஆண்டு 19 வயதுள்ள இளைஞனாய் திபெத்திற்குள் ஊழியம் செய்ய சென்றவர்தான் சாது சுந்தர் சிங் அவர்கள். ஒருமுறை லாசா பட்டணத்திற்குள் நுழைந்தார். அம்மக்களிடையே சுவிசேஷத்திற்கு வரவேற்பில்லை, எனவே அவர்கள் சுந்தர் சிங்கை பிடித்து அந்நாட்டின் பிரதமர் லாமாவிடம் கொண்டு சென்றனர். அவர் சுந்தர் சிங்கிற்கு



மரண தண்டனை விதித்தார். அந்நாட்டின் வழக்கத்தின்படி அவர்கள் அவரை எலும்புகள் நிறைந்த கிணற்றுக்குள் தூக்கி எறிந்தனர். மயக்கம் தெளிந்து எழுந்தபோது எங்கும் இருளாக இருந்தது. இதற்கு முன் கிணற்றில் வீசி எறியப்பட்ட பலரது அழுகிய மாம்சமும், எலும்புகளும் எங்கும் நிறைந்து, தாங்க முடியாத துர்நாற்றம் வீசியது. பசி, தாகம், வேதனை இவைகளின் மத்தியில் சுந்தர் சிங்கிற்கு தூக்கம் வரவில்லை.

மூன்றாம் நாளில் ஜெபித்து மரணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார். திடீரென்று மூடியிருந்த கிணற்றின் பூட்டை யாரோ ஒருவர் திறக்கும் சத்தம் கேட்டது. ஆர்வத்துடன் அண்ணாந்து பார்த்த போது, மேலேயிருந்த மனிதர், கீழே விடப்படும் கயிற்றை உன் இடுப்பில் கட்டிக்கொள் என்றார். மேலே வந்ததும் அவர் சுந்தர் சிங்கைத் தூக்கி கிணற்றிற்கு வெளியே விட்டார். மறுபடியும் கிணற்றின் கதவு மூடப்படும் சத்தம் கேட்டது, அவருக்கு நன்றி சொல்லும்படி திரும்பி பார்த்தபோது என்ன ஆச்சரியம் அங்கு யாருமில்லை. கர்த்தர் தம்முடைய பராக்கிரமத்தினால் மரண தருவாயில் இருந்த அவரை விடுவித்து தம்முடைய வல்லமையை நிரூபித்தார். சாது சுந்தர் சிங்கை போல நீங்களும் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கலாம். “நீங்கள் ஆராதிக்கும் தேவன் சர்வ வல்லமையுள்ள தேவன் அவர் உங்களுக்காக யுத்தம் செய்வார். அவராலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை. நம்முடைய ஆண்டவர்

இயற்கைக்கு மேற்பட்ட அற்புதங்களைச் செய்கிறவர்" என்பதை மறந்து விடாதீர்கள்.

நேபுகாத்நேச்சார் ராஜாவால் பொற்சிலை நிறுவப்பட்டு, பாபிலோன் மாகாணத்திலிருக்கிற எல்லோரும் சிலையை வணங்க வேண்டும் என்ற சூழ்நிலை வந்தபோது, மூன்று வாலிபர்கள் வணங்கவில்லை. ஏன் என்று ராஜா கேட்ட போது, "**சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவை நோக்கி: நேபுகாத்நேச்சாரே, இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை" (தானியேல் 3:16)** என்று பதில் கூறினார். எப்படி இவர்களால் இப்படி தைரியமாக உத்தரவு சொல்ல முடிந்தது என்று யோசிக்கிறீர்களா? எரிந்துக் கொண்டிருக்கிற அக்கினியின் வல்லமையைக் காட்டிலும் தேவனுடைய வல்லமை பெரியது என்று விசுவாசித்தனர். உபத்திரவக் காலத்தில் நமக்கு விசுவாசம் மிகவும் முக்கியம்.

***நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்***



இந்த உலகத்தில் உபத்திரவம், பாடுகள், நிந்தைகள், அவமானங்கள் இவைகளெல்லாம் உங்களுக்கு வராது என்று இயேசு சொல்லவில்லை. மாறாக, "**உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" (யோவான் 16:33)** என்று தான் இயேசு சொன்னார். தங்களுக்கு உபத்திரவத்தைக் கொடுத்த ராஜாவைப் பார்த்து, இவர்கள் சொன்ன விசுவாச வார்த்தை என்னவெனில், "**நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்" (தானி. 3:17)** என்றனர். இந்த விசுவாசமுள்ள வார்த்தைகளை கர்த்தர் கேட்டு தம்முடைய வல்லமையினால் எரிகிற அக்கினி சூளைக்கு இவர்களை தப்புவித்து கர்த்தர் பராக்கிரமமுள்ள தேவன் என்பதை நேபுகாத்நேச்சாருக்கும், பாபிலோன் மாகாணத்திலுள்ள அனைவருக்கும் நிரூபித்தார்.

இவர்கள் மூன்று பேரும் தங்களுடைய மரணத்தருவாயில் ஆண்டவரை நிந்திக்கவுமில்லை, குறை சொல்லவுமில்லை. ஏன் இந்தப் பாடுகளை எங்கள் வாழ்வில் அனுமதித்தீர் என்று ஆண்டவரிடம் கேள்வி கேட்கவுமில்லை. ஆனால் நீங்கள் உங்களை சுற்றி இருக்கிற சூழ்நிலைகளைப் பார்த்து உங்கள் வாயினால் என்ன அறிக்கை செய்கிறீர்கள் என்று சற்றே நிதானித்துப் பாருங்கள். உங்கள் வாயின் வார்த்தைகளில் எச்சரிக்கையாக இருங்கள். கப்பல் பிரயாணத்தில் இருந்த சீஷர்கள் தங்கள் படகு சுழல் காற்றினாலும், பெரும் அலைகளினாலும் அடிக்கப்படும் போது மரித்துவிடுவோமோ என்று அவிசுவாசத்தினால் இயேசுவை எழுப்பினார்கள். அவர் எழுந்து காற்றையும், கடல் அலைகளையும் அதட்டி விட்டு, "**அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார்" (மாற்கு 4:40)**. தங்களோடு இருக்கும் ஆண்டவர் சர்வ வல்லவர் என்பதை சீஷர்கள் உணராமல் இருந்தபடியால் தான் பயந்தார்கள். ஒருவேளை நீங்களும் இந்த சீஷர்களைப் போல என் வாழ்க்கை என்னவாகும் என்று பயந்து போன நிலைமையில் இருப்பீர்களானால், உங்கள் சூழ்நிலைகளைக் காட்டிலும் இயேசு பெரியவர் என்றும், அவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்றும், "**கர்த்தரின் வலதுகரம் உயர்ந்திருக்கிறது, கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்" (சங். 118:16)** என்பதை நினைவுப்படுத்தி உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

*பிரியமான வாலிபர்களே! நீங்களும் நானும் ஆராதிக்கிற தேவன் சர்வ வல்லமையுள்ளவர் தம்மை நம்புகிறவர்களுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களை செய்து சூழ்நிலைகளை மாற்றுகின்ற தேவன். தங்களுடைய மரணத்தருவாயில் தேவன் எங்களை விடுவிப்பார் என்ற விசுவாசத்தோடு இருந்த மூன்று எபிரெய வாலிபர்கள் மத்தியில் உலாவின கர்த்தர் உங்கள் நடுவிலும் இருக்கிறார் என்பதை விசுவாசியுங்கள். அவர் உங்களுக்காக யுத்தம் செய்வார். அவராலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை. எனவே உங்கள் சூழ்நிலைகளைப் பார்த்து பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள். பராக்கிரமமுள்ள தேவன் உங்களோடு இருக்கிறார்!* ●



ஆலோசனை: அவி

# கசப்பான அனுபவம்

**நான் பன்னிரெண்டாம் வகுப்பு முடித்து, Visual Commuication படித்து மீடியாவில் சாதிக்க வேண்டுமென்பது எனது ஆசை. நான் விரும்பின VIS.COM. கிடைக்காமல் ஒரு வருடம் வீணாகி விட்டது. ஜெபித்து தான் அந்தப் படிப்பிற்காக விண்ணப்பித்தேன். நான் விரும்பின பாடம் எனக்கு கிடைக்காததால் மிகவும் சோர்ந்து போய்விட்டேன். இந்த சூழ்நிலையில் எனது 22 வயதான அண்ணன் காதல் திருமணம் செய்து கொண்டு தனியே போய்விட்டான். பெற்றோர் மிகவும் மனமுடைந்துப் போனார்கள். இதனால் வீட்டில் சமாதானம் சந்தோஷம் இல்லை. என் படிப்பைப் பற்றிய எந்த எண்ணமும் எனக்கு வரவில்லை. இப்பொழுது என் வீட்டிற்கு அருகாமையிலுள்ள ஒரு பையன் என்னை விரும்புவதாகச் சொல்லி மிகவும் தொந்தரவு செய்கிறான். இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில் என் பெற்றோரிடம் சொன்னால் மிகவும் நொந்து போவார்கள். இதை என் பெற்றோரிடம் சொல்ல வேண்டுமா? வேண்டாமா? என்று எனக்குத் தெரியவில்லை. இதனால் என்னால் ஜெபிக்கவோ, வேதம் வாசிக்கவோ முடியவில்லை. நான் அந்தப் பையனிடம் என்ன சொல்வது? எனக்கு ஆலோசனை சொல்லுங்களேன் - ஷீபா, டெல்லி.**

அன்பு சகோதரி ஷீபா! உங்களின் பிரச்சனை மிகவும் வேதனையான ஒன்று. ஒரு பக்கம் விரும்பிய பாடத்தை படிக்க முடியவில்லை, ஒரு வருடம் வீணாகி விட்டது, மறுபக்கம் குடும்பத்தில் ஏற்பட்ட ஒரு கசப்பான அனுபவம், வெளியில் தலைக்காட்ட முடியாத அவமானம். மேலும் காதல் என்ற பெயரில் உங்களைத் தொந்தரவு செய்யும் நபர் ஒரு பக்கம். என்ன செய்வதென்று தெரியாமல் திக்குமுக்காடும் நிலை தெளிவாக புரிகிறது.

ஷீபா! எல்லாருக்கும் ஒரு கனவு, குறிக்கோள் இருக்கும். அதை அடைய வேண்டும் என்ற ஆசையும் இருக்கும். ஆனால் அதை அடைய முடியாத போது சோர்ந்து போய் முடங்கி போவது இயல்பு. ஆனால் மிகவும் குறைவான வாலிபர்கள் மட்டுமே சோர்ந்து போகாமலும், முடங்கிப் போகாமலும், வேறு என்ன செய்யலாம், என்ன படித்தால் நாம் இலக்கை அடைய முடியும் என்று யோசித்து முன்னேறுகிறார்கள். எனவே ஷீபா, நீங்கள் ஒரு வருடத்தை வீணாக்கி விட்டோமே என்று யோசிக்காமல், வேறு என்ன பாடத்திட்டதை எடுத்தால் நீங்கள் ஆசைபடுகிற மீடியாவில் சாதிக்க முடியும் என்று யோசித்து செயல்படுங்கள்.

மேலும் உங்கள் அண்ணனின் செயலால் உங்கள் பெற்றோர்கள் சோர்ந்து போயிருக்கிறார்கள். ஒரு வேளை நீங்கள் படித்து முடித்து, சொந்த காலில் நின்று, சமூகம் புகழும் வண்ணம் இருந்தால், உங்கள் பெற்றோர் உங்கள் நிமித்தம் சந்தோஷமாக இருக்க வாய்ப்பு உண்டு. எனவே உங்கள் கனவைத் தொடர முயலுங்கள். இந்த நாட்களில் படித்த பட்டதாரிகளுக்கே வேலை குதிரைக் கொம்பாக இருக்கிறது. எனவே நாட்களை வீணாக்காமல் மீடியா Course படிக்க முயலுங்கள், சாதிக்க ஆசைப்படுங்கள். உங்களின்





**உலகம் சொல்லும் காரியம் கேட்பதற்கும், பார்ப்பதற்கும் நன்றாக இருக்கும். ஆனால் நிஜ வாழ்க்கைக்கு அது பொருந்தாது.**

உயர்வு உங்கள் பெற்றோருக்கு மிகப் பெரிய சந்தோஷத்தைக் கொடுக்கும்.

மேலும் தற்பொழுது ஏற்பட்ட காதல் தொந்தரவு, மிகவும் ஆபத்தான ஒன்று. நீங்கள் சரியாக அதை கையாளவில்லையென்றால், அந்த ஆசை வலையில் விழ வாய்ப்பு உண்டு. மேலும் அந்தப் பையனிடம் என்ன பதில் சொல்லலாம் என்று நீங்கள் யோசிப்பதைப் பார்க்கும் போது Yes சொல்லலாமா? என்று Plan பண்ணுவது போல தோன்றுகிறது.

## ஒருவேளை Yes சொன்னால் நடக்கும் விபரீதங்கள்...

★ உங்கள் மீடியா படிப்பின் கனவு கலைந்துப் போக வாய்ப்பு உண்டு.

★ உங்கள் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் வயதும், அனுபவமும் உங்களுக்கு இல்லை என்பதால், ஒரு தவறான நபரை தீர்மானம் செய்து, உங்கள் வாழ்க்கையில் மேலும் ஒரு சோகத்தையும், வெறுப்பையும் கொண்டு வர வாய்ப்பு உண்டு.

★ உங்கள் அண்ணனைப் போல நீங்களும் இந்த சிறிய வயதில் தவறான தீர்மானம் எடுத்து, பின்னர் உங்கள் காதல் திருமணத்தால் மேலும் பெற்றோரை துக்கப்படுத்த வாய்ப்பு உண்டு.

★ நீங்கள் காதல் செய்யும் நபர் ஒரு தவறான நபராக இருந்தால், உங்கள் வாழ்க்கை துயரம் நிறைந்ததாக மாறும்.

## ஒருவேளை No சொன்னால் நடக்கும் நன்மைகள்...

★ உங்கள் இலக்கான மீடியா படிப்பை படிக்க ஒரு வாய்ப்பு உண்டு.

★ உங்களைத் தொந்தரவு செய்யும் நபரை குறித்தக் காரியத்தை, சரியான நேரம் பார்த்து உங்கள் பெற்றோரிடம் சொல்லும் போது அவர்கள் உங்களை பாதுகாத்துக் கொள்ள ஆலோசனை வழங்குவது மட்டும் அல்லாமல், உங்கள் மேல் பெற்றோருக்கு ஒரு தனி நம்பிக்கையும் மதிப்பும் உண்டாகும்.

★ நீங்கள் எடுக்கும் சரியான தீர்மானம் உங்களைப் போன்ற பல பெண்களுக்கு எடுத்துக்காட்டாக மாற முடியும்.

★ தடைபட்ட உங்களின் ஜெப வாழ்க்கையும், வேத தியானமும் மறுபடியும் சீராக அமைய வாய்ப்பு உண்டு.

ஷீபா! உங்களின் தீர்மானம், உங்களுடைய பிரகாசமான எதிர்காலத்தை நிர்ணயிக்கும். எனவே தெளிவாக தீர்மானம் எடுக்கவும். உலகம் சொல்லும் காரியம் கேட்பதற்கும், பார்ப்பதற்கும் நன்றாக இருக்கும். ஆனால் நிஜ வாழ்க்கைக்கு அது பொருந்தாது. இன்றைய சூழலில் பெண்கள் தைரியமாக எழுந்து, சாதித்து முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். நீங்களும் ஒரு சாதனையாளராக மாற வேண்டும். என்னால் படிக்க முடியவில்லையே, காதல் பிரச்சனை வந்து விட்டதே என்று சோர்ந்து போக வேண்டாம். உங்களால் நிச்சயம் கவனம் செலுத்தி படிக்க முடியும், Media Course Join பண்ண முடியும், படித்து முடித்து உங்கள் பெற்றோர் சந்தோஷபடும் வண்ணம் உயர முடியும் என்று யோசியுங்கள், விசுவாசத்தோடு செயல்படுங்கள் ●




**"நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது" (நீதி. 23:18).**

**ஜெபித்து செயல்படுங்கள்!**

Refresh | Revive | Recharge

# Revival IGNiTERS

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில்
அனல்கொண்டு எழும்பவும், வேதத்தின்
ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள்
தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும்
Igniters கூடுகை அமைகிறது. நீங்களும்
இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே!
உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த
ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

## EVERY 1ST SUNDAY
(4th July)

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center, Ajantha Mahal, No.3,6th West Cross Road, Gandhi Nagar.
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:62 2nd Floor, Benny Kumaran Main Road. 9442082200

**TIRUPATI (3PM)**
Old Community Hall, West Church.
9985033401 | 9442885315

## EVERY 2ND SATURDAY
(10th July)

**MADURAI (4:30 - 6:30PM)**
Gethsamane Prayer Centre 2/56, Upstairs, 1st Street, Main Road, Subramaniya Puram.
9750955548 | 0452-2677300

## EVERY 2ND SUNDAY
(11th July)

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School, Opp Rly. Station.
9597927799 / 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsemane Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, M.C.Road.
9444381971 | 9488475315

**VILLUPURAM (3 - 6PM)**
Jesus Redeems Office Dhanalakshmi Garden Behind Lakshmi Hospital Villupuram .
8344411022 | 9442885315

**KOVILPATTI (3PM – 6 PM)**
St. Paul's Matriculation School, Kovilpatti.
9750955548 | 9787322334

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building R.A. Nursing Institute SCV Computers (top floor) Main Road, Alangulam, Near Union Office Opposite.
9965377427 / 9750955548

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center, No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor.
9750955548 | 9976766422

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School, Surandai.
9443962141 | 9750955548

## EVERY 3RD SUNDAY
(18th July)

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center Shah Complex No: 43/R4, Rajendra Nagar Trivandrum Road.
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center, No:90,1st, Floor Arts College Rd., Near Charan Tower, Coimbatore.
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center 22A, Ist Floor, Thennur High Rd., Near KMC Bus Stop, Thennur,
9488475315

# ஆயத்தப்படு ஆயத்தப்படுத்து

**JEBAMALAI (2PM)**
Kadaiyam (via), Keelamathapuram, (TirunelveliDist).
8300131000 | 9750955548

**MUMBAI (5PM - 8PM)**
Gethsamane Prayer Centre, Bethel, Plot 305/E, Mith Chowky Marve Road Malad
9004882470 | 9664050567

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road.
9488475315

**DINDIGUL (3PM - 5:30 PM)**
CSI Sophia School, (Opp: Govt Hospital) Dindugal.
9750955548 | 6383015262

**THIRUVARUR (3:30 PM)**
Gethsamane Prayer Center,1A/25B, Bypass Road (Opp Arasu Autos)
9976766322 | 7373374733

**TIRUVANNAMALAI (3:30 PM)**
A L C Lebanon compound, Near Vijaya Mall, Bye pass Road Corner.
9791444788 | 9865553420

**RANIPET (3 - 6P.M.)**
Gethsemane Prayer Centre,
MBT Road, Navalpur
9500283179 / 9442885315

## EVERY 4TH SATURDAY
(24th July)

**PERAMBALUR (5PM - 8 PM)**
Gethsamane Prayer Centre
M K Complex 71, Venkatesapuram Near Bank Of Baroda, Trichy Main Road.
9788788512

## EVERY 4TH SUNDAY
(25th July)

**PERNAMBUT (3 PM- 6 PM)**
Revival Prayer Tower, V. Kotta Road, Pernambut, Vellore Dist.
9940854125 | 9442885315

**ERODE (4 PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:216, Ist Floor Near Fire Service, Gandhiji Road, Erode. 9750722000

**THIRUVALUR (2.30PM-5.30 PM)**
Gethsamane Prayer Center, HSR Tower (Near Gowdi Church) Theradi, Thiruvallur. 9442885315


இயேசு விடுவிக்கிறார்

வாலிபர் உலகம்

சத்தியம் TV சனிக்கிழமை 6:30am
அதே நேரத்தில் Youtube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும்
அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல்
இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட
ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!

Sathiyam TV YouTube
Comforter DIGITAL CHANNEL

9750955547



உண்மை சம்பவம்: வயலா

# மௌன யுத்தம்
# யோபு - 4



சே... என்ன வாழ்க்கை! அப்பாவுக்கு வேலையில்லை, அம்மாவுக்கு சுகமில்லை, தம்பி தங்கைக்கு படிப்பில்லை, குடும்பத்திற்கு வருமானமுமில்லை, சந்தோஷமுமில்லை, சமாதானமுமில்லை, நிம்மதியுமில்லை, ஆறுதல் சொல்லவோ, உதவிக்கரம் நீட்டவோ நண்பர்களும் இல்லை, உறவுகளும் இல்லை, எத்தனை எத்தனை இழப்புகள், ஏன் இந்தப் பாடுகள் என்று இந்த பெருந்தொற்று காலத்தைக் குறித்து சலித்துக் கொள்பவர்கள் அநேகர். பாடுகள் தேவனால் அனுப்பப்படவில்லை அனுமதிக்கப்படுகின்றன என்பதை உணர்த்தும் யோபு நூல், சாத்தானின் சோதனை பற்றியும், தேவ அனுமதிப்புப் பற்றியும் தெளிவாகக் கூறுகிறது. பாடுகளின் உச்சக்கட்டத்தைத் தொட்டும் மனதில் உறுதியோடு வாழ்ந்து பின் இரட்டிப்பான ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்த யோபு என்ற மாமனிதரைக் குறித்து இன்று தியானிப்போம்.

## பின்னணி

'யோபு' என்ற பெயருக்கு துன்புறுத்தப்பட்டவர்/ பகையாக்கப்பட்டவர் என்று பொருள்கள் யூகிக்கப் படுகின்றன. இவர் வாழ்ந்த 'ஊத்ஸ்' என்னும் தேசம் ஏதோம் எல்லைக்கு உட்பட்ட பகுதியாகக் கருதப்படுகிறது (புலம்பல் 4:21).யோபின் வாழ்நாள் காலம், அவர் குடும்பத் தலைவராக ஆசாரியத் திருப்பணி செய்ததன் (யோபு 1:5, 42:8) மூலம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டவராக இருக்கவில்லை, மற்றும் ஆபிரகாமின் காலமாகவோ அதற்கு முந்தியோ இருக்கலாம் என்று கருதப்படுகிறது. சில வேத வல்லுனர்கள் இவரே இசக்காரின் மூன்றாவது மகன் (ஆதி. 46:3) என்கின்றனர். யோபு ஒரு பெரும் பணக்காரர். இவரிடத்தில் 7000 ஆடுகளும், 3000 ஒட்டகங்களும், 500 ஏர் மாடுகளும், 500 கழுதைகளும் இருந்தன. இவ்வளவு கால்நடைகளையும் பராமரிக்கத் தேவையான வேலைக்காரர்களும் இருந்தார்கள். இவர் ஏழு குமாரர், மூன்று குமாரத்திகள், மனைவியோடு சந்தோஷமாய் வாழ்ந்து வந்தார். ஆனால் சாத்தான் இவரைச் சோதிக்க தேவனிடத்தில் உத்தரவு பெற்று வந்த போது, ஒரே நாளில் அனைத்து கால்நடைகளையும், வேலைக்காரர்களையும், பத்து பிள்ளைகளையும் இழக்க நேரிடுகிறது. சற்று சிந்தித்துப் பாருங்கள், அடுத்தடுத்து துக்ககரமான செய்திகளின் நிமித்தம் அவரது மனநிலை எவ்வளவு கலக்கமாகவும், வேதனையாகவும் இருந்திருக்கும். ஆனால் அப்பொழுது அவர் கூறிய வார்த்தைகள் என்னத் தெரியுமா? "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" இவ்வார்த்தைகள் அவருடைய தேவ



பக்தியையும், தேவன் மேல் உள்ள விசுவாசத்தையும், ஆவிக்குரிய வாழ்வின் நிதானத்தையும் வெளிப்படுத்துகிறது. அடுத்து இரண்டாம் கட்ட சோதனையாக, சாத்தான் யோபின் சரீரத்தில் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை கொடியப் பருக்கள் உண்டாக்கி அவரை வாதித்தான்.

இந்த சூழ்நிலையில் அவரது மனைவியும் கூட தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்று அவரை நிந்திக்கிறாள். பாடுகள் மத்தியில், கொடிய துக்கத்தில் தனித்து விடப்படுகிறார். இப்பொழுது அவர் மனதில் நடந்திருக்கும் மௌன யுத்தத்தின் கற்பனை காட்சியைக் கீழ்க் காண்போமா?



நான் ஏன் தான் பிறந்தேனோ? கர்ப்பத்திலே அழித்து இருந்தால் நலமாயிருக்குமே! என் பிள்ளைகளுக்கு பதில் நான் மரித்து போயிருக்கலாம். தேவன் என்னை நொறுக்க சித்தமானது என்ன? நான் உத்தமமாய், தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகி வாழ்ந்து என்ன பிரயோஜனம்? எல்லாம் வீண்.



தேவன் எத்தனையோ நன்மைகளை எனக்கு கொடுத்து இருந்தார். இத்தனை வருடங்கள் சந்தோஷமாய் அனுபவித்தேன். இந்தப் பாடுகளையும் நான் பொறுமையாய் சகிக்க வேண்டும். அவரே சிருஷ்டிகர் நான் அவர் சிருஷ்டி தானே, என் மேல் எல்லா அதிகாரமும் அவருக்கு உண்டு. அவரை நான் கேள்வி கேட்கக் கூடாது.



அதிகாலையில் எழுந்து என் குமாரர்களை பரிசுத்தப்படுத்தி சர்வாங்க தகன பலிகள் செலுத்தினேனே. கர்த்தர் அதை நினைத்துக்கூட என்னை பாதுகாக்கவில்லையே. நான் குருடனுக்கு கண்ணும், சப்பாணிக்கு காலுமாயிருந்தேனே. எத்தனை ஏழைக்கும், திக்கற்ற பிள்ளைக்கும், விதவைக்கும் ஆதரவாய் இருந்தும் பலன் இல்லையே. ஏன் தேவன் கொடூரமுள்ளவராக மாறினார்? என் மனைவி சொன்னது போல் தேவனை தூஷித்து ஜீவனை விடுவது சரிதானோ?



இல்லை, இல்லை, சர்வ வல்லவருடைய ஞானம் விஸ்தாரம். அவர் எதைச் செய்தாலும் எனது நன்மைக்கே செய்திருப்பார். அவரைக் குறை சொல்ல நான் யார்?



செத்துப் போன கால்நடைகளெல்லாம் போனது போகட்டும்,என்பிள்ளைகளையாவது தேவன் காப்பாற்றி இருக்கலாமே! என் வேலைக்காரருடைய நியாயத்தைக்கூட நான் அசட்டைப் பண்ணியதில்லையே. என் சரீரத்திலாவது சுகமிருந்தால் நன்றாயிருக்குமே! என் தோல் வெடித்து, இந்தக் கொடிய புண்கள் என்னை வாதிக்குதே. எல்லாருடைய கேலிக்கும் நிந்தனைக்கும் உள்ளானேனே தேவன் இப்படி என்னை கைவிட்டு விட்டாரே.



இந்தக் கொடிய துக்கத்தில், என் தேவனுக்கு விரோதமாய் பேசாதபடிக்கு சர்வ வல்லவர் என்னை காப்பாராக. அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவரில் நம்பிக்கையாயிருப்பேன்.

எத்தனை மனஉறுதி? இவ்வாறு அதிகபட்சமான பாடுகள், இழப்புகளைச் சந்தித்த யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை, தேவனைப் பற்றிக் குறை சொல்லவுமில்லை என்று வேதம் அவரைக் குறித்து சாட்சி கூறுகிறது (யோபு 1:22, 2:10). இதன் விளைவாக யோபு இரட்டத்தனையான ஆசீர்வாதங்களை தேவனிடமிருந்து பெறுகிறதை (யோபு 42:10-16) நாம் வேதத்தின் மூலம் அறிந்திருக்கிறோம்.

**இன்று பெருந்தொற்று காலத்தில் வாழ்கிற நீங்கள் கூட, ஏதோ ஒன்றை இழந்து துக்கத்தோடு இருக்கலாம். ஆராய்ந்து முடியாத காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களையும் செய்கிற தேவன் மேல் விசுவாசமாயிருங்கள். அவர் இருதயத்தில் ஞானமுள்ளவர், பெலத்தில் பராக்கிரமமுள்ளவர் (யோபு 9:4). நீங்கள் எந்த சூழ்நிலையில் இருந்தாலும் எல்லா மனிதருடைய கண்களுக்கு முன்பாக உங்களை உயர்த்த அவர் வல்லவராயிருக்கிறார். தேவனை துக்கப்படுத்தும் வார்த்தைகளை மட்டும் ஒருநாளும் பேசி விடாதிருங்கள். மாறாக கர்த்தரை துதியுங்கள்! நிச்சயமாக நீங்களும் இரட்டத்தனையான ஆசீர்வாதங்களைப் பெறுவீர்கள்!!** ●

சாதனை: சுமா

# கனவு பாதையை நோக்கி!


## ராணி ராம்பால்




இந்த உலகத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு நபருக்கும் எதிர்கால கனவு என்பது வாழ்க்கையின் ஒரு முக்கிய அங்கமாக உள்ளது. 100 சதவீதத்தில் 50 சதவீதம் பேர் கடினமாக போராடி கனவை நனவாக்குகின்றனர். 50% பேர் அதை ஒரு கனவாகவே எண்ணி தங்கள் வாழ்க்கையை நடத்துகின்றனர். வாழ்க்கை என்பது கடவுள் கொடுத்த பரிசு. அதை விலை மதிப்பில்லாத பொக்கிஷமாக மாற்றுவது எதிர்கால சாதனையாளர்களாகிய உங்கள் கைகளில் தான் உள்ளது. இதோ உங்களை மெருகேற்றுவதற்காக ஒரு சாதனையாளரின் வாழ்க்கை உங்கள் முன்...

ஹரியானாவில் இருக்கும் ஷஹாபாத் மார்க்கண்டா என்னும் சிறு நகரில் வண்டி இழுக்கும் கூலித் தொழிலாளிக்கு மூன்றாவது குழந்தையாக பிறந்தார் ராணி ராம்பால். அவர் இருந்த பகுதியில் பெண் குழந்தைகளுக்கு ஹாக்கி பயிற்சி அளிக்கும் பயிற்சிக்கூடம் செயல்பட்டு வந்தது. அந்தப் பயிற்சிக் கூடத்திலிருந்து தான் அநேக பெண்கள் இந்தியா விற்காக ஹாக்கி விளையாட சென்று இருக்கின்றனர். இதை அனுதினம் பார்த்த ராணி ராம்பாலுக்கும் இந்தியாவிற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று அதிதீவிர ஆசை வளர்ந்தது. அந்த ஆசையை தன் பெற்றோரிடம் சொன்னார். ஒரு பக்கம் வறுமை இதற்கான காரணமாக இருந்தாலும் கூட பெண் பிள்ளையை விளையாட அனுமதித்தால் அக்கம் பக்கத்தினர் மற்றும் உறவினர்கள் குடும்பத்தைப் பற்றி தவறாக நினைப்பார்கள் என்று எண்ணி பெற்றோர் ராணி ராம்பாலை விளையாட அனுமதிக்கவில்லை. இதற்கு ஏற்றார் போலவே ராணி ராம்பால் தன் கனவை பெற்றோரிடம் சொல்லும் போது, அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் "நீங்கள் மட்டும் பெண் பிள்ளையை ஹாக்கி விளையாட அனுமதித்தால் அவள் T-ஷர்ட் மற்றும் குட்டைப் பாவாடை அணிந்து விளையாடுவாள், உங்களது குடும்ப மரியாதையே போய்விடும்" என கூறி வந்தார்கள்.

இதையெல்லாம் கேட்ட ராம்பாலின் பெற்றோர், ராம்பாலை விளையாட அனுமதிக்கக் கூடாது என்று உறுதியாக இருந்தனர். ஆனால் ராம்பால் தான் கொண்ட தீர்மானத்தில் உறுதியாக நின்றார். தினமும் தன் பெற்றோரிடம் ஹாக்கி விளையாட அனும திக்குமாறு கெஞ்சுவாள். ராம்பாலின் ஆர்வத்தையும் மன உறுதியையும் கண்ட பெற்றோர் 3 ஆண்டுகளுக்குப் பின் அவளை அனுமதித்தனர். மூன்று வருடம் தன் கனவிற்காக விடாபிடியாகப் போராடி கடைசியாக விளையாடச் சென்றார்.



பெண்களுக்கு மிகச் சிறப்பாக பயிற்சி அளிக்கும்

அகாடமி என்று அறியப்படுகின்ற ஷாஹாபாத் ஹாக்கி அகாடமியில் ராணி ராம்பால் தனது கனவு பயணத்தைத் தொடர்ந்தார். ஹாக்கி பேட்டை எடுத்து ராணி விளையாடத் தொடங்கிய போது அவளுக்கு வயது 7. ராணி காலை 5 மணிக்கு பயிற்சிக்கு செல்ல அவருடைய அம்மா தூங்காமல் விழித் திருந்து எழுப்பி விடுவார்கள். ஏனெனில் அவர்கள் வீட்டில் கடிகாரம் வாங்கக்கூட காசு இல்லை. அம்மா தூங்காமல் இருப்பதைப் பார்த்து வருத்தப்பட்ட ராணி, பள்ளியில் நடைபெற்ற கையெழுத்துப் போட்டியில் வென்றால் கடிகாரம் பரிசு தருவார்கள் என்று அறிந்தவுடன் கடினமாக பயிற்சி எடுத்து அப்போட்டியில் வென்று கடிகாரத்தை அம்மாவுக்கு பரிசளித்தாள். ஆரம்ப காலக்கட்டத்தில் ராணி ராம்பாலுக்கு எப்படியாவது இந்தியாவிற்காக விளையாடி பெருமை சேர்க்க வேண்டும் என்பதே அவரது கனவாக இருந்தது. கடுமையான பயிற்சிக்கு பிறகு 8 ஆண்டுகள் கழித்து முதல் சர்வதேச போட்டியில் கலந்து கொண்டார். ஆனால் அதில் இந்திய வெற்றிப் பெறவில்லை. இந்தியா ஒலிம்பிக் போட்டியில் பங்கு பெறும் வாய்ப்பை இழந்தது. ராணி ராம்பாலுக்கு ஒலிம்பிக் போட்டி குறித்தும் அதில் விளையாடுவது எவ்வளவு முக்கியம் என்று அப்பொழுது அறிந்திருக்கவில்லை. ஆனால் இந்தியாவிற்காக விளையாடினேன் என்ற மகிழ்ச்சி மட்டுமே இருந்தது.




அடுத்த நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு டெல்லியில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் மீண்டும் தோல்விக் கண்டார். தோல்வி மேல் தோல்வி. இந்தியா ஒலிம்பிக்கில் வெற்றிப் பெற முடியவில்லையே என்ற கவலை அவரை நெருக்கியது. இடைவிடாத முயற்சிக்குப் பிறகு 2015ஆம் ஆண்டு பெல்ஜியத்தில் நடந்த போட்டியில், அரை இறுதிக்கு முன்னேறியதால் 2016ஆம் ஆண்டு ஒலிம்பிக்



போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது இந்தியா. 36 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியா அப்போதுதான் ஒலிம்பிக் போட்டியில் விளையாட வாய்ப்பைப் பெற்றது.

இந்திய அணியுடன் விளையாடுவது தான் தனது கனவு என்று எண்ணி விடாப்பிடியாக ஓடிய ராணி ராம்பாலுக்கு இந்திய ஹாக்கி அணியை முன் நடத்தும் பொறுப்பு கிடைத்தது. 2017ஆம் ஆண்டு அந்த வாய்ப்பைப் பெற்ற ராணி ராம்பால் மிகச் சிறப்பாகவும், நேர்த்தியாகவும் வழிநடத்திச் சென்றார். அவரது சிறப்பான செயல்பாட்டைப் பாராட்டி இந்திய அரசு பத்மஸ்ரீ விருது அளித்து கவுரவப்படுத்தியது. 2019ஆம் ஆண்டிற்காக உயரிய விருதான "வேர்ல்ட் கேம்ஸ் அத்லெட் ஆஃப் தி இயர்" என்ற விருதை வென்று சாதனைப் படைத்துள்ளார். உலக அளவில் இவ்விருதினை பெறும் முதல் ஹாக்கி வீராங்கனை ராணி ராம்பால்.

இன்று இதை வாசிக்கும் இளம் சாதனையாளர்களுக்கு ராணி ராம்பாலின் வாழ்க்கை ஒரு புத்து ணர்ச்சியை தரும் என்று நம்புகின்றேன். நாம் சாதனையாளராக மாற வேண்டும் என்றால் அநேக தோல்விகள், ஏளனப் பேச்சுகள், பயம், சந்தேகம் போன்ற அநேகக் காரியங்களை எதிர்த்துப் போராட வேண்டும். 'நம்மால் முடியாதது வேறு யாரால் முடியும்' என்பதை உறுதியாக பிடித்துக் கொண்டு முன்னேறுங்கள். காலத்தைக் கருத்தாக பயன்படுத்துங்கள். வெற்றி வலம் வாருங்கள்! வெற்றி உங்கள் வசப்படும்!!

## தெரிந்து கொள்ளப்பட்ட பராக்கிரமசாலிகள்

# தாவீது

யுத்தத்தில் அனுபவமில்லாத வாலிபன் தாவீது பெலிஸ்தனான கோலியாத்துடன் மோதினார். தாவீதைவிட கோலியாத் மிகவும் உயரமானவன், பெலசாலி. யாரிடமும் இல்லாத வெண்கல கேடகம், கூரான வெண்கல ஈட்டி அவனிடம் இருந்தது (1 சாமு. 17:5,6). ஆனால் தாவீது சாதாரண ஆடு மேய்ப்பன். தன் சகோதரர்களுக்காக அப்பங்களையும் பால்கட்டிகளையும் எடுத்துக் கொண்டு போர் களத்திற்கு சென்றார் (1 சாமு. 17:17,18). தாவீதிடம் ஒரு கவண் மட்டுமே இருந்தது. கோலியாத்தோடு யுத்தம் செய்ய யாரும் தயாராக இல்லை. சவுல் ராஜாவும், இஸ்ரவேலர் அனைவரும் கலங்கி மிகவும் பயப்பட்டார்கள் (1 சாமு. 17:11). அனுபவமில்லாத தாவீது யுத்தத்திற்கு ஆயத்தமாகி போர்க் கவசம் எதுவும் அணியாமல் தன் கையில் கொண்டு வந்த கவணையும், கூழாங்கற்களையும் எடுத்துச் சென்றார். கோலியாத் ஏளனமாகப் பார்த்தான். தாவீது சமயோஜிதமாக ஒரு கூழாங்கல்லை கவணில் வைத்து வேகமாக சுழற்றி கோலியாத்தின் நெற்றியில் அடிக்க, கோலியாத் நிலைகுலைந்து கீழே விழுந்தான். (1 சாமுவேல் 17).

**அன்பான வாலிபர்களே! ஆடு மேய்த்துக் கொண்டிருந்த தாவீதை பராக்கிரமசாலியாக மாற்றி, ராட்சதன் கோலியாத்தை விழ்த்த முடியுமானால், இன்றைக்கு உங்களையும் பராக்கிரமசாலிகளாக மாற்ற தேவன் ஆயத்தமாக இருக்கிறார்! நீங்கள் ஆயத்தமா?**



# அபிசாய்

தாவீதின் நாட்களில் அவரோடு யுத்தத்தில் நின்றவர் தாவீதின் சகோதரி செருயாளின் மகன் அபிசாய். சவுலுக்கு பயந்து தாவீது அதுல்லாம் கெபிக்குப் போனதைக் கேள்விப்பட்டு அவர் சகோதரரும், தகப்பன் வீட்டாரும் அவரோடு வந்து சேர்ந்தார்கள். அவர்களோடு கூட செருயாளின் மகன்களான ஆசகேல், யோவாப், அபிசாயும் வந்து குகைகளிலும் மற்றும் தாவீது போகும் இடங்களிலெல்லாம் கூடவே போய் யுத்தத்தைப் பழகி, யுத்தத்தில் பராக்கிரமசாலிகளானார்கள். அபிசாய் 11 ஆயிரம் ஏதோமியரைக் கொன்றான் (1 நாளா. 18:12,13). ஈட்டியை ஓங்கி 300 பேரை மடங்கடித்தான் (2சாமு. 23:18). அம்மோனியர்கள் சீரியர்களைத் தங்களோடு சேர்த்துக் கொண்டு தாவீதுக்கு விரோதமாக யுத்தத்திற்கு வருகிறார்கள். யோவாபின் தலைமையில் தாவீது யுத்தத்திற்குச் செல்கிறார் (1 நாளா. 19:8-15). அபிசாய் ஒருபக்கம் அம்மோனியருக்கு விரோதமாய் போகிறார். இஸ்பிபெசெத் என்னும் பெலிஸ்திய இராட்சதன் தாவீதைக் கொல்ல வேண்டுமென்று யுத்தத்தின் போது, குறுக்காக வருவதைப் பார்த்த அபிசாய் இஸ்பிபெசெத்தைக் கொன்று தாவீதின் உயிரைக் காப்பாற்றினார் (2 சாமு. 21:15-21). சேபா என்னும் பேலியாளின் மகன் ராஜாவினிடத்தில் பெரிய குழப்பத்தைச் செய்யப் பார்க்கிறான் (1 சாமு. 20:6). அந்த நேரத்தில் அதையும் கச்சிதமாக முடிக்கிறார். அபிசாய் அந்த அளவுக்கு பராக்கிரமசாலியாக இருந்தார்.



**அன்பான வாலிபர்களே! அபிசாய் போன்று கையில் எந்தப் பொறுப்பைக் கொடுத்தாலும் ஞானமாய் செய்யும் போது பராக்கிரமசாலியாக தேவன் மாற்றுவார். உங்கள் பொறுப்பை ஞானமாய் செய்ய ஒப்புக்கொடுப்பீர்களா?**

# கிதியோன்



இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தார்கள். தேவன் மீதியானியரின் கையில் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததின் மூலமாக அவர்களைத் தண்டித்தார். அவர்கள் இஸ்ரவேலின் சத்துருக்களாக இருந்தார்கள். காட்டு மிராண்டிகளான மீதியானியர்களுக்கு இஸ்ரவேலர் பின்வாங்கினார்கள். மீதியானியர்கள் மிகவும் பலமுள்ளவர்களாக இருந்தபடியால் இஸ்ரவேலர்களின் நிலத்தின் விளைச்சலை அழித்தார்கள். ஆடு, மாடு, கழுதைகளைத் திருடினார்கள். இஸ்ரவேலர்கள் நெருக்கப்பட்டு, நம்பிக்கையற்றவர்களாகப் போனார்கள். மீதியானியரின் கை இஸ்ரவேலின் மேல் பலத்ததால் அவர்கள் தங்களுக்கு மலைகளிலுள்ள கெபிகளையும், குகைகளையும், அரணான ஸ்தலங்களையும் அடைக்கலங்களாக்கிக் கொண்டார்கள். உயிருக்குப் பயந்து மலைகளிலும், கெபிகளிலும் வாழ்ந்த கிதியோனைப் பார்த்து, பராக்கிரமசாலியே என்று அழைத்து (நியா. 6), உனக்கு இருக்கிற இந்தப் பெலத்தோடு போ, இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய் என்று கர்த்தர் வாக்குக் கொடுத்து அனுப்புகிறார்.

***அன்பான வாலிபர்களே! இன்றைக்கு நீங்களும் தேசத்தில் நடக்கிற காரியங்களைப் பார்த்து பயந்து போய் இருக்கிறீர்களா? பயப்படாதீர்கள்! இஸ்ரவேல் மக்கள் மீதியானியர் நிமித்தம் கர்த்தரை நோக்கி கூப்பிட்டபோது, கர்த்தருடைய தூதனானவர் பேசி பலப்படுத்தியது போல, உங்களையும் பலப்படுத்தி பராக்கிரமசாலியாக மாற்றுவார்!***

# பெனாயா

யோய்தாவின் மகனான பெனாயா மிகவும் பராக்கிரமசாலி. இவர் மோவாபிலுள்ள இருபலம் பொருந்திய மனிதர்களைப் போரிட்டுக் கொன்றார். ஒருமுறை பனி பெய்துக் கொண்டிருந்தபோது, அவர் குளிரிலிருந்து தப்பிக்க ஒரு குகைக்குள் போக, அங்கு ஒரு சிங்கம் இருந்தது. இரைத் தன்னைத் தேடி வருகிறதே என சிங்கம் மகிழ்ந்தது. பெனாயாவின் வீரத்தைப் பற்றி அது அறிந்திருக்கவில்லை. பெனாயா அஞ்சாமல் சீறி வந்த சிங்கத்தை அடித்தேக் கொன்றார். ஒருமுறை 7½ அடி உயரமுள்ள அரக்கனைப் போன்ற எகிப்தியன் ஒருவன் கையில் ஈட்டியோடு இவர் முன்னால் நின்றான். இவரிடம் ஒரு கோல் மட்டுமே இருந்தது. அதைக் கொண்டே வீரமாய் போரிட்டு எதிரியின் ஈட்டியைத் தட்டிப் பறித்து, அதை வைத்தே அவனைக் கொன்றார். இவர் இதுபோல் பலவேலைகளைச் செய்ததால், தாவீது இவரை மெய்க்காப்பாளர்களின் தலைவனாக மாற்றினார் (2 சாமு. 23:20-23).




***அன்பான வாலிபர்களே! சீறிவரும் சிங்கத்தைப் போல பிரச்சனைகள் எழும்பி வந்தாலும், பெனாயாவைப் போல் நீங்களும் எதிரியாகிய சாத்தானை வீழ்த்தி பராக்கிரமசாலிகளாக எழும்புவீர்களா?***

செய்தி:சகோ.மோகன் சி.லாசரஸ்



# எசேக்கியாவின் உண்மை!



**அந்நாட்களில் எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்திற்கு ஏதுவாயிருந்தான்; அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குப்படுத்தும்; நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அப்பொழுது எசேக்கியா தன் முகத்தைச் சுவர்ப்புறமாகத் திருப்பிக்கொண்டு, கர்த்தரை நோக்கி: ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம் பண்ணினான்...**
**(2 இராஜா. 20:1,2).**



எசேக்கியா ராஜா, எருசலேமை மையமாக வைத்து யூதேயா தேசத்தை ஆட்சி செய்து வந்தார். அவர் 25ம் வயதில் ராஜாவாக முடிசூட்டப்பட்டார் என்று 2 இராஜாக்கள் 18ம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறதை நாம் வாசிக்கிறோம். இஸ்ரவேல் தேசத்தில் 29 வருடங்கள் ஆட்சி செய்து, கர்த்தருடைய பார்வைக்கு நலமானதை செய்தார். அதாவது தேவனுக்கு பிரியமானதை செய்வதற்கு தன்னை அர்ப்பணித்து கொண்ட ஒரு ராஜா. கர்த்தருக்கு பயந்து, அவருடைய வழிகளைக் கைக்கொண்டு, அவருக்கு பிரியமாய் நடந்து, கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட எசேக்கியாவை கேன்சர் என்கிற பிளவை நோய் தாக்குகிறது. வீட்டின் அரண்மனையில் எசேக்கியா வியாதிப்பட்டு படுக்கையில் கிடக்கிறார், அவன் எனக்கு பிரியமானபடியெல்லாம் வாழ்ந்தான், ஆனால் இப்பொழுது அவன் மரிக்கப் போகிறான், நான் அவனை எடுத்துக் கொள்ளப் போகிறேன், எனவே நீ போய் அவனிடம், வீட்டுக் காரியத்தை ஒழுங்குப்படுத்த சொல் என்று ஏசாயா தீர்க்கதரிசியிடம் சொல்லி அனுப்புகிறார். ஏசாயா தீர்க்கதரிசி அரண் மனைக்கு வந்தது எசேக்கியா ராஜாவுக்கு மிகவும் சந்தோஷம். கர்த்தர் நல்ல செய்தியைச் சொல்லி அனுப்பியிருக்கலாம் என்று எதிர்பார்த்தார். ஆனால் நீர் சாகப்போகிறீர், பிழைக்க மாட்டீர், கர்த்தர் உம்மை எடுத்துக் கொள்ளப் போகிறார், வீட்டை ஒழுங்குப்படுத்தும் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொல்லிவிட்டு ராஜாவின் வீட்டின் அறையிலிருந்து கடந்து போகிறார்.



உடனே எசேக்கியா ராஜா, தன் முகத்தைச் சுவர்ப்புறமாகத் திருப்பிக்கொண்டு, '**கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும்**' என்று சொல்லி கர்த்தரை



நோக்கி எசேக்கியா ஜெபிக்கிறார். தேவன் அந்த ஜெபத்தைக் கேட்டு, தேவனுடைய உள்ளம் உடைந்து விட்டது. ஏசாயா தீர்க்கதரிசி செய்தியை சொல்லிவிட்டு ராஜாவின் அரண்மனையை விட்டு வெளியே வரவில்லை. அப்பொழுது மறுபடியும் இயேசு ஏசாயாவிடம், நீ திரும்பிப்போய், என் ஜனத்தின் அதிபதியாகிய எசேக்கியாவை நோக்கி, உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன், இதோ நான் உன்னைக் குணமாக்குவேன்' என்று சொல் என்று அனுப்புகிறார். ஏசாயா திரும்பி வருகிறார் என்பதைக் கேட்டு, சுவர்புறமாக படுத்திருந்த எசேக்கியா, தேவன் என் ஜெபத்திற்கு பதில் கொடுத்திருக்கிறார், அதனால்தான் தீர்க்கதரிசியை திரும்ப அனுப்பியிருக்கிறார் என்று திரும்பி படுத்தார். உங்கள் கண்ணீரை கர்த்தர் கண்டார், உங்கள் ஜெபத்தைக் கர்த்தர் கேட்டு, இன்னும் 15 வருடம் கூட்டி கொடுப்பேன் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னார். அதுபோல தான் நம்முடைய ஜெபத்தைக் கேட்டு கிருபையால் நாட்களை கூட்டிக் கொடுத்து வருகிறார்.



எசேக்கியா ஜெபித்த போது, '**கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும்**' என்பதாக சொல்கிறார். ஆண்டவருக்கு முன்பாக உண்மையாய் நடந்ததை எசேக்கியா ஞாபகப் படுத்துகிறார். தேவனும் எசேக்கியா தனக்கு முன்பாக உண்மையாக நடந்தான் என்பதை நினைவு கூருகிறார். யார் உண்மையாயிருக்கிறார்களோ அவர்களுக்கு கர்த்தர் அற்புதம் செய்வார். எண்ணாகமம் 12:7ம் வசனத்தில், என் தாசனாகிய மோசே, என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன், நான் என்ன சொன்னாலும் அதை செய்வதில் கவனமுள்ளவன், ஏமாற்றாதவன் என்று கர்த்தர் சாட்சிக் கொடுக்கிறார். அதனால் தான் கர்த்தர் மோசேயோடு முகமுகமாய் பேச முடிந்தது. 'அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால்' (தானி. 6:4) என்று தானியேலைக் குறித்து வேதம் சாட்சிக் கொடுக்கிறது. தானியேல் 9ம் அதிகாரத்தில், தேவதூதன் பிரத்தியட்சமாய் வந்து நிற்கிறார். தானியேலே, நீ எனக்கு மிகவும் பிரியமானவன், நீ வேண்டிக்கொள்ள தொடங்கினவுடன் பரலோகத்திலிருந்து என் தாசனாகிய தானியேல் ஜெபிக்கிறான் நீ பதில் கொண்டு போ என்று கர்த்தர் கட்டளைக் கொடுத்துவிட்டார். தானியேல் தன்னுடைய பொறுப்பில், அரசாங்க வேலை காரியத்தில் உண்மையுள்ளவனாக இருந்தான்.



நீங்கள் வீட்டிற்குள் உண்மையாயிருக்கிறீர்களா? கணவன் மனைவிக்கு, மனைவி கணவனுக்கு உண்மையாக இருக்கிறீர்களா? பெற்றோர் பிள்ளைகளுக்கு, பிள்ளைகள் பெற்றோருக்கு உண்மையாக இருக்கிறீர்களா? உங்கள் அப்பா அம்மாவை ஏமாற்றுகிறீர்கள் என்றால் கர்த்தர் உங்களைக் குறித்து எப்படி சாட்சி சொல்ல முடியும்? உங்கள் கணவனை ஏமாற்றி, உங்கள் மனைவியை ஏமாற்றி ஒரு உண்மையற்ற தன்மை உங்களுக்குள் இருந்தால் எப்படி அற்புதம் செய்ய முடியும்? நான் உண்மையாயிருக்கிறேன் என்று உங்களால் சொல்ல முடியுமா?

ஒரு கிராமத்தில் ஊழியக்காரர் ஒருவர் மூன்று நாள் கூட்டத்தில் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கித்தார்கள். பிரசங்கத்தைக் கேட்டு ஜனங்கள் பயந்து நடுங்கி ஒப்புக்

கொடுக்கிறார்கள். மூன்று நாள் கூட்டம் முடிந்து, நான்காவது நாள் காலையில் ஊழியக்காரர் அந்த ஊரை விட்டு புறப்படுவதற்காக அந்த ஊரிலிருந்து டவுனுக்கு போய் அவர் ஊருக்கு போக பஸ்ஸில் ஏறினார். அடுத்த பட்டணத்திற்கு போவதற்கு 10 ரூபாய் கொடுத்து டிக்கட் வாங்கி கொண்டார். நடத்துனர் மீதி காசு கொடுக்கும் போது, ஒரு ரூபாய் அதிகமாக கொடுத்து விட்டார். ஊழியக்காரர் பார்க்கும்போது நான்கு ரூபாய்க்கு பதிலாக ஐந்து ரூபாய் இருந்தது. நான் ஏமாற்றி அவர் பையில் இருந்து எடுக்கவில்லை, அவராக தான் ஒரு ரூபாய் அதிகமாக கொடுத்திருக்கிறார் பையில் போட்டு விடலாம் என்று நினைக்கும் போது, அந்த ஒரு ரூபாய் உன் காசு இல்லை, திருப்பிக் கொடு என்று கர்த்தர் பேசினார். அந்த ஊழியக்காரர் நடத்துனரைக் கூப்பிட்டு ஒரு ரூபாய் அதிகமாக தந்துவிட்டீர்கள் என்று அவரிடம் திருப்பிக் கொடுத்தார். அந்த நடத்துனர், உங்கள் பிரசங்கத்தை கேட்டேன், நீங்கள் உண்மையான ஊழியக்காரனா அல்லது ஏமாற்றுகாரனா என்றுப் பார்க்கத் தான் உங்கள் கையில் ஒரு ரூபாயை அதிகமாகக் கொடுத்தேன். இப்போது நீங்கள் உண்மையான ஊழியக்காரன் என்று நான் நம்புகிறேன் என்றார். அப்படித்தான் தேவனும் நம்மை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒரு ரூபாய் ஆனாலும் எந்த இடத்திலும் உண்மையாயிருங்கள்.




நீங்கள் வேலையில் உண்மையாயிருக்கிறீர்களா? அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டிய வரியில் உண்மையாயிருக்கிறீர்களா? தேவன் அதைக் கவனிக்கிறார். உங்கள் பணக்காரியத்தில், உங்கள் வருமானத்தில் உண்மையாய் இருக்கிறீர்களா? நான் எல்லாவற்றிலும் உண்மையாயிருக்கி றேன் என்று சொல்லுங்கள் உங்களை கர்த்தர் ஆசீர்வதிப்பார். எசேக்கியாவைப் பாருங்கள் நான் உண்மையாய் இருந்தேன் என்று ஆண்டவரிடம் சொல்கிறார். உங்களால் இதுபோல் ஆணித்தரமாக சொல்ல முடியுமா?



பிரியமான வாலிபர்களே! எழுப்புதலுக்காக ஜெபிக்க வேண்டும், எழுப்புதலுக்காக செயல்பட வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். எசேக்கியா உண்மையுடனும் உத்தமத்துடனும் நலமானதைச் செய்தார். அதுபோல நாமும் வாழ அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். யாரும் நம்மை குறை சொல்லாதபடி, குற்றம் கண்டுபிடிக்க முடியாதபடி உண்மையுள்ள வாழ்க்கை வாழ வேண்டும். வேலையில், தொழிலில், வாழ்க்கையில் உண்மையும் உத்தமமுமாய் நடந்து கொள்ள வேண்டும். அப்படி உங்களை ஒப்புக் கொடுக்கும்போது உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் ஆசீர்வாதம் உண்டாகும்! ●

WE'RE GOING LIVE
JULY. 25TH
3 TO 5PM - SUNDAY




IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH

Message and Prayer: Bro. Mohan C. Lazarus



# எஸ்தர்

**(தேவ ஜனங்கள் பாதுகாக்கப்படுதல்)**



**அன்பான இளம் நெஞ்சங்களே! இந்த மாதம் சரித்திர நூல்களில் பன்னிரண்டாவது புத்தகமான எஸ்தர் பற்றி சுருக்கமாக காணலாம். சரித்திர நூல்களில் வரிசையில் எஸ்தர் கடைசி புத்தகம்.**

### அறிமுகம்

பெர்சியாவின் ராஜாவாகிய அகாஸ்வேரு தனக்கு ராணியாக தெரிந்துகொண்ட ஒரு அழகான யூத பெண்ணின் கதையை இந்த புத்தகம் சொல்கிறது. ஆமான் எல்லா யூத ஜனங்களையும் கொலை செய்ய திட்டமிட்டபோது, எஸ்தரின் வளர்ப்புத் தந்தையாகிய மொர்தெகாய், யூத ஜனங்களைக் காக்கும்படி எஸ்தரை தூண்டிவிட்டான். அவள் தன் ஜீவனை பெரிதாக எண்ணாமல் முறையிட்டு காப்பாற்றினாள். இந்நூலில் தேவன் என்றோ, கர்த்தர் என்றோ பொருள்படுகிற வார்த்தைகள் சொல்லப்படவில்லை. இருந்தாலும் இந்தப் புத்தகத்தின் மையக்கருத்தும், நோக்கமும், உபத்திரவத்திலும் கஷ்டத்திலுமுள்ள தேவ ஜனங்களுக்கு தேவன் பாதுகாப்பு அளிப்பதாகக் காட்டுகிறது.

**ஆசிரியர்:** தெளிவாக யார் எழுதியது என்று கொடுக்கப்படவில்லை. (எஸ்றா எழுதப்பட்டதாக சொல்லப்பட்டாலும் 9ம் அதிகாரம் 20ம் வசனத்தின் அடிப்படையில் மொர்தெகாய் இதை எழுதியிருக்கலாம்).

**எழுதப்பட்ட காலம்:** கி.மு. 464 – கி.மு. 435

**அதிகாரம்: 10**

**வசனங்கள்: 167**

**வார்த்தைகள்: 5,637**

**முக்கிய நபர்கள்:** எஸ்தர், ஆமான், மொர்தெகாய், அகாஸ்வேரு

### சிறப்பம்சங்கள்

இந்நூலில் தான் இந்திய தேசத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இது அகாஸ்வேரு கொடுத்த விருந்து, எஸ்தர் ராஜாவுக்கு கொடுத்த விருந்து, பூரீம் பண்டிகை விருந்து என்று மூன்று பகுதிகளாக பிரிக்கலாம்.

### யூத ஜனத்திற்கு விரோதமான யோசனை

- வஸ்தி ராணி ராஜபதவியிலிருந்து விலக்கப்படுதல் (1 அதிகாரம்)
- எஸ்தர் தெரிந்தெடுக்கப்படுதல் (2 அதிகாரம்)
- யூத ஜனத்திற்கு எதிரான ஆமானின் துர்ஆலோசனை (3 அதிகாரம்)

### யூத ஜனங்களின் விடுதலை

- யூத ஜனத்திற்காக எஸ்தரின் தீர்மானம் (4, 5 அதிகாரங்கள்)
- ஆமான் தோற்கடிக்கப்படுதல் (6,7 அதிகாரங்கள்)
- அகாஸ்வேரு ராஜாவின் ஆணையும், மொர்தெகாயும் (8 அதிகாரம்)
- யூத ஜனத்தின் எதிரியின் தோல்வி (9:1–19 வசனங்கள்)
- பூரீம் என்ற பண்டிகையின் நாட்கள் (9:20–32 வசனங்கள்)

மொர்தெகாயின் மேன்மையும், அவனுடைய ராஜ சபையின் உயர்வும் (10 அதிகாரம்)

### எஸ்தர் புத்தகத்தில் கிறிஸ்து

மக்களுடைய இரட்சிப்புக்காக தன்னுடைய ஜீவனையும் பொருட்படுத்தாது விருப்பத்துடன் தன்னை ஒப்புக்கொடுத்து, மக்களுக்காக ஒரு மத்தியஸ்தனாக இயேசுவைப் போன்று பணி செய்ததில், எஸ்தர் புத்தகம் ஒரு பொருத்தமான இயேசுவின் சித்திரத்தைக் கொடுக்கிறது.

கேள்வி பதில்: ரேச்சல் செல்வக்குமார்

# மேக்-அப் (அலங்காரம்) செய்வது சரியா? தவறா?



கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப தம்பி, தங்கச்சி! நம்மை ரசித்துக் கொண்டிருக்கும் 'பரம ரசிகராம்' இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இளமைத் துள்ளும் வாலிப பருவத்தில் தன்னைப் பற்றிய ரசனை, தன்னை அலங்கரித்துக் கொள்ளுவதில் ஆர்வம், மற்றவர் தன்னைப் பார்த்து ரசிக்க வேண்டும் என்ற ஆசை, இவையெல்லாம் சாதாரணமாக எல்லாரிடத்திலும் காணப்படும் ஒரு சுபாவம் தான். ஆனால் நாம் செய்து கொண்டிருப்பது வேதத்தின்படி, சரிதானா? என்று உணர்ந்து நடந்து கொள்ள விரும்பும் ஒவ்வொரு பிள்ளைகளுக்குமான ஒரு சின்ன வேத தெளிதல் தான் இக்கட்டுரை.

ஒரு காலத்தில் குளித்த பின்பு கிரீம் பூசி, பவுடர் போடுவது என்பது மட்டுமே அதிகபட்ச வழக்கமாக இருந்து வந்தது. மற்றபடி நடிப்பதற்காக மட்டுமே 'அரிதாரம்' (Make-up) பூசினார்கள். ஆனால் தற்போது அனுதின வாழ்க்கையில் மேக்-அப்பிற்கு மட்டுமே செலவிடப்படும் நேரமும், பணமும் அளவிற்கதிகமாக போய்க் கொண்டிருக்கிறது. மேக்-அப் போடுவதால் தன்னம்பிக்கை கிடைக்கிறது, மற்றவர் முன் நம்மை அழகாக Present-பண்ணுகிறது தான் நம்மைப் பற்றிய ஒரு நல்ல Impression-ஐ ஏற்படுத்தும் என்றெல்லாம் நிறைய காரணங்கள் கூறுகின்றோம். உண்மையில், நம்மை எப்படி அலங்கரிக்க வேண்டும், எப்படி அலங்கரிக்கக் கூடாது என வேதம் தெளிவாக கற்றுக் கொடுக்கிறது.

### ஏன், எப்படி அலங்கரிக்கக் கூடாது?

**"நம்மில் இலட்சணமுள்ளவைகளுக்கு அலங்கரிப்பு வேண்டியதில்லை"** **(1 கொரி. 12:24)** எனத் தெளிவாக வேதம் கூறுகிறது. அப்படியென்றால், நான் அழகாக, இலட்சணமாக இல்லையென்ற எண்ணம் யாருக்கு இருக்கிறதோ (தன்னம்பிக்கை இல்லையோ) அவர்களுக்கு தான் அலங்கரிப்பு தேவை. அப்படிப் பட்டவர்கள் மேக்-அப் செய்வது, "நான் அழகாக இல்லை" என்று தன்னை குறைபட்டு கொள்வதோடு மட்டுமல்லாமல் தன்னை ரசித்து படைத்த தேவனையும் குறை கூறுவதற்கு சமமாகும். "ஆண்டவரே! நீர் என் புருவத்தைச் சரியாக வளைத்து வைக்காமல் இப்படி செய்து விட்டீரே! நானே திருத்திக் கொள்கிறேன். என் உதட்டிலும், விரல் நகங்களிலும் ஒரு நல்ல கலர் அடிக்கக் கூட உமக்கு தெரியவில்லை நாதா! அதையும் நானே சரியாக அடித்துக் கொள்கிறேன்.



எரேமியா 13:23ம் வசனத்தில், தோலை (சிவப்பழகாக) மாற்ற முடியாதென்று எப்படி தேவா நீர் கூறுகிறீர்! இதோ நான் மாற்றிக் காட்டுகிறேன் பாருங்கள் என்று மேக்-அப் மூலம் மாற்றிக் கொள்வது, இவையெல்லாம் நாம், நம்மை ரசித்து, ரசித்து உருவாக்கிய தேவனிடம் வாயினால் சொல்லாமல் (Correction) செய்து காட்டிக் கொண்டிருக்கிறோம்.

யாரென்றே தெரியாத, நாம் தினமும் போகும் போதும், வரும் போதும் சந்திக்கும் நபர்கள் நம்மை ரசிக்க வேண்டும் என்றோ, நம்மை விரும்புபவர்கள் ரசிக்க வேண்டுமென்றோ இத்தனை பணமும், நேரமும்

விரயம் செய்யும் நாம், நம்மை அணுஅணுவாக ரசித்து ரசித்து படைத்த, இன்னமும் ரசித்துக் கொண்டிருக்கின்ற நம்முடைய பரம மணவாளன் மனம் எத்தனை வேதனையடையும் என்பதை சிறிதும் நினைப்பதில்லை. இவ்வுலக மக்கள் நம்மை நம் இளமை காலம் வரை மட்டுமே ரசிப்பார்கள், அதற்குபின் இளமை போய் விட்டால் என்னதான் செலவு செய்து அலங்கரித்தாலும் பரிகாசம் செய்வோர் மட்டுமே மிஞ்சுவர். எனெனில் இந்த அழகு தற்காலிகமானது. ஆனால் நம்மை ரசிக்கும் தேவனின் ரசனை நிரந்தரமானது. எது முக்கியம் என சிந்தித்துக் கொள்ளுங்கள். மேலும் என்னதான் அலங்கரித்தாலும், தேவ வசனம் என்னும் ஞானம் நம் வாழ்வில் இல்லையெனில் "**பன்றியின் மூக்கிலுள்ள பொன்மூக்குத்தி**" **(நீதி. 11:22)** என்று தான் எண்ணப்படுவீர்கள். இவைகளெல்லாம் பெண்களுக்கு தான், நமக்கில்லை என நினைக்கும் வாலிபரே! அவர்கள் மேக்–அப் செய்வதற்கு இணையாக நீங்கள் சிகை அலங்காரம், தாடி அலங்காரம் ஹேர் கலரிங், காதில் வளையம், கிழிந்த ஜீன்ஸ், டாட்டூ என்று நீங்களும் வேதத்திற்கு புறம்பாக தான் திரிகிறீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள் (1 கொரி. 11:4; லேவி. 19:27,28; மத். 5:36). தகுதியான வஸ்திரம் உடுத்த வேண்டுமென வேதம் கூறுகிறது. கண்ணியமாக உடுத்துங்கள்!



### எப்படி அலங்கரிக்கலாம்?

நம்மை அழகுபடுத்தவேக் கூடாது என வேதம் கூறவில்லை. மாறாக, நம்மை எப்படியெல்லாம் அலங்கரித்தால் தேவன் ரசிப்பார் என்று அவரே நமக்கு சொல்லித் தருகின்றார். "**சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்**" **(நீதி. 31:30)** என்று வேதம் கூறுகிறது. பெண்ணிற்கு மட்டுமல்ல, ஆணிற்கும் இது பொருந்தும். இனியும் நாம் வஞ்சனையையும், வீணானவைகளையும் தேடாமல் நிரந்தரமான அழகு எது எனத் தேட வேண்டும். 1 பேதுரு 3:4,5ம் வசனத்தில், சாந்தம், அமைதலுள்ள ஆவி, இருதயத்தில் இருக்கும் நற்குணமே அழியாத அலங்கரிப்பு, அதுவே தேவனுடைய பார்வையில் விலையேற பெற்றது. மேலும் கீழ்படிதலும் கூட சிறந்த அலங்கரிப்பு தான். நரைமுடி மகிமையின் கிரீடம் (நீதி. 16:31) என்று வேதம் கூறுகிறது. மேலும் வாய், உதடு, கண், கால் போன்றவற்றிற்கான சிறப்பு மேக்–அப் பற்றிக்கூட நீதி. 4:24–26ல் கொடுக்கப்பட்டுள்ளது. அதோடுகூட பெஸ்ட் Facial Powder நீதி. 15:13ல் உள்ளது, அதையும் சேர்த்து அலங்கரித்து சிரித்த முகத்துடன் காணப்பட்டால், உங்களைக் காணும் அனைவரையும் கவர்ந்து கொள்ளலாம். நமது குணாதிசயங்கள் தான் நம்மை அலங்கரித்து காட்டும் Make-up Box.




இக்கட்டுரையின் மூலம் மேக்-அப் செய்பவர்கள் பாவிகள் என்றோ, நரகத்திற்குச் செல்வார் என்றோ நான் கூறவில்லை. மாறாக, தேவனுடைய இருதயத்திற்கு நெருக்கமாக மாறவே ஆலோசனை கூறுகிறோம். தகுதியாக உடுத்துங்கள், சுத்தமாக இருங்கள். சிலர் விதண்டாவாதமாக, வெளி நாட்டினர் எப்போதும் மேக்-அப் செய்கிறார்களே! அது தவறா? என்று கேட்பர். மறுபடியும் கூறு கிறேன், தேவன் கலாச்சாரம், பழக்கவழக்கங்களுக்கு அப்பாற்பட்டவர். இப்படி செய்ய வேண்டாம் என்பதைவிட, அப்படி செய்தால் உச்சிதமாக இருக்கும் என்பதே நம் கருத்து. தேவன் நீங்கள் எதை, எந்த நோக்கத்திற்காக செய்கிறீர்கள் என்று உங்கள் முகத்தையல்ல உங்கள் இருதயத்தையே பார்க்கிறார். எனவே வீணானவைகளுக்கு எதையும் (நேரம், பணம்) வீணாக்காமல், நமது பரம ரசிகர் நம்மை பார்த்து, என் பிரியமே! நீ ரூபவதி! உன்னில் பழுதொன்றுமில்லை என்று கூறும்படி வாழ முயற்சிப்போமாக! ●

# ஜெபக்கையேடு ஜூலை 2021

## வேலைக்காக காத்திருப்போர்

▸ தமிழகத்தில் ஜூன் 2020 நிலவரப்படி பள்ளி மாணவர்கள், இளங்கலை பட்டப்படிப்பு படித்தவர்கள், முதுகலை பட்டப்படிப்பு படித்தவர்கள் என 67 லட்சத்து 37 ஆயிரத்து 785 பேர் அரசு பணிக்காக காத்திருக்கின்றனர்.

▸ இவர்களில் 24 வயது முதல் 35 வயது வரையிலான 25 லட்சத்து 29 ஆயிரத்து 477 பேர் வேலைக்காக காத்திருப்பதாக வேலை வாய்ப்பு இயக்குனரகம் தெரிவித்துள்ளது.




## ஜெபக்குறிப்புகள்

1 தமிழகத்தில் வேலைக்காக காத்திருக்கும் 67 லட்சம் பேருக்கும் வேலைகள் கிடைக்கப் பெற ஜெபிப்போம்.

2 படித்து முடித்து வேலைக்கு காத்திருக்கும் சுமார் 25 லட்ச்சம் இளைஞர்களுக்கு அரசு பணி வழங்கப்பட ஜெபிப்போம்.

3 வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கும் ஒவ்வொருவருக்கும் பதிவு மூப்பு அடிப்படையில் வேலைகள் வழங்கப்பட ஜெபிப்போம்.

4 தமிழகத்தில் வேலை வாய்ப்புகள் இல்லாமல் மனதளவில் பாதிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவருக்குள்ளும் சமாதானம் உண்டாக

ஜெபிப்போம்.

5 வேலைக்காக காத்திருந்து வேலை கிடைக்காமல் தற்கொலை தான் முடிவு என்ற நிலைக்கு தள்ளும் தற்கொலையின் ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.




## தமிழ்நாடு

▸ தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் புதிதாக 33 அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர் பதவியேற்றிருக்கின்றனர்.

▸ ஒவ்வொரு துறைக்கு ஒரு அமைச்சர் என நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

▸ தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களிலும் நீர்வளம், நிலவளம், பெருகி தமிழ்நாடு சிறந்த மாநிலமாக மாற வேண்டும்.

## ஜெபக்குறிப்புகள்

1 தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர்கள் மற்றும் 34 அமைச்சர்களுக்கும் தேவன் நல்ல ஞானத்தையும் விவேகத்தையும் கொடுக்க ஜெபிப்போம்.

2 தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களிலும் ஆசீர்வாதமான மாற்றம் உண்டாகவும், தமிழ்நாட்டில் சமாதானம் உண்டாகவும் ஜெபிப்போம்.

3 மதுபானக் கடைகள் மூடப்படவும், குற்றங்கள் தடுக்கப்படவும் ஜெபிப்போம்.

4 ஒவ்வொரு மாவட்ட கலெக்டர்கள் மற்றும் அதிகாரிகள் ஞானமாய் செயல்படவும், அவர்களுக்கு நல்ல பாதுகாப்பு கிடைக்கவும் ஜெபிப்போம்.

5 தமிழ்நாட்டில் கிரியை செய்யும் பொல்லாத ஆவியின் கிரியைகள் முற்றிலும் அழிக்கப்படவும், தமிழ்நாடு ஆசீர்வதிக்கப்படவும் கருத்தாய் ஜெபிப்போம்.



## கொள்ளை நோய்

▸ உலகளவில் கொரோனா பாதித்தோர் சுமார்16.85 கோடியாக உயர்ந்துள்ளது.

▸ கொரோனாவால் சுமார் 3 கோடியே 49 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். கொரோனாவிலிருந்து 15 கோடி பேர் மீண்டுள்ளனர்.

▸ கருப்பு, வெள்ளை பூஞ்சையை விட அதிக ஆபத்தான மஞ்சள் பூஞ்சை நோய் உருவாகி வருகிறது.

▸ கொரோனா 3வது அலை உருவாகும் என்று ஆய்வுகள் தெரிவிக்கிறது. இதில் பிள்ளைகள் பாதிக்கப்படுவதாகவும் குறிப்பிடுகிறது.

ஜெபம்: எஸ்தர்

### ஜெபக்குறிப்புகள்

1 கொரோனாவினால் உலக நாடுகள் இனியும் பாதிக்கப்படாமல் ஒரு சுமூகமான நிலைக்கு வர ஜெபிப்போம்.

2 புதிதாக உருவாகியுள்ள பூஞ்சை நோய்கள் யாரையும் தாக்காதபடிக்கு அனைவரும் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

3 கொரோனா 3வது அலை எந்த தேசத்திலும் ஊடுருவாதபடி, தேவன் அந்த வாதையை தேசத்திலிருந்து அழித்துப் போடவும், பிள்ளைகள் யாரும் இதில் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.

4 மருந்துகள் தட்டுப்பாடின்றி கிடைக்கவும், மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவோர் சுகம் பெறவும் ஜெபிப்போம்.

5 பொருளாதார வீழ்ச்சியிலிருந்து முற்றிலும் விடுபட்டு தேசம் சுமூகமான முறையில் நடைமுறைபடுத்தப்பட ஜெபிப்போம்.

## எழுப்புதல்

▸ உலகம் தழுவிய எழுப்புதலை நாம் எதிர்பார்த்து நிற்கிறோம். 7 விதமான எழுப்புதல் உண்டாகும் என்று ஆண்டவர் வாக்குக் கொடுத்திருக்கிறார்.

▸ அதன்படி ஜெப எழுப்புதல், சுத்திகரிப்பின் எழுப்புதல், வல்லமையின் எழுப்புதல், இரட்சிப்பின் எழுப்புதலை நம் கண்களால் பார்த்து வருகிறோம். நாம் இப்பொழுது ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம்.

▸ அடுத்த வரபோகிற மூன்று விதமான எழுப்புதலைப் பார்க்க வேண்டும், அதற்காக ஊழியர்கள் எழும்ப வேண்டும்.



### ஜெபக்குறிப்புகள்

1 உலகம் தழுவிய எழுப்புதலுக்கு தடையாக காணப்படும் பொல்லாத ஆவியின் கிரியைகள் முற்றிலும் அழிக்கப்பட ஜெபிப்போம்.

2 தேசத்தின் மேல் தேவன் அக்கினியைப் போடவும், அது சீக்கிரத்தில் பற்றி எரிய வேண்டுமென்றும் ஜெபிப்போம்.

3 ஏழு விதமான எழுப்புதலும் சீக்கிரத்தில் உண்டாகி, உலகம் தழுவிய எழுப்புதலை நம் கண்கள் காண வேண்டும் என்பதற்காக ஜெபிப்போம்.

4 சபைகள், ஊழியர்கள், விசுவாசிகள் எழுப்புதலுக்கு ஆயத்தமாக்கப்பட்டு, மற்றவர் களை ஆயத்தப்படுத்தவும் ஜெபிப்போம்.

5 எழுப்புதலுக்கு தடையாக காணப்படும் நம்முடைய பாவங்களை அறிக்கை செய்து ஜெபிப்போம்.



# பாதுகாப்பு வளையம்

இஸ்ரவேல் தேசம் 1948ஆம் ஆண்டு தனி நாடாக உருவானது. தனி நாடாக உருவான நாள் முதல் இதுவரை பல யுத்தங்களையும், போர்களையும், சுற்றிலுமுள்ள நாடுகளிலிருந்து தாக்குதல்களையும் சந்தித்து வருகிறது. உலக வரைபடத்தில் உற்றுப் பார்த்தால் மட்டுமே தெரியும் ஒரு சின்ன தேசம், எப்படி இத்தனை பிரச்சனைகள், போராட்டங்களைக் கடந்தும் நிலைத்தும் நிற்கிறது என்பது ஆச்சரியமான விஷயம் தான், அதற்கு முக்கிய காரணம் அந்தத் தேசத்தை பாதுகாக்கும் தேவன் உறங்குவதுமில்லை, தூங்குவதுமில்லை (சங்கீதம் 121:4). அவர் பாதுகாப்பது மாத்திரமல்ல, அவர்களுக்கு தேவையான ஞானத்தையும், தேசத்தைப் பாதுகாக்கும் யுக்திகளையும் அவர் கற்றுக்கொடுக்கிறார், என்ன ஆச்சரியம்!


ஆம், கடந்த மே (2021) மாதம் இஸ்ரவேல் தேசத்திற்கும், பாலஸ்தீன தீவிரவாத அமைப்பினருக்கும் கடுமையான மோதல் ஏற்பட்டதை நாம் அறிவோம். இந்த மோதலில் நூற்றுக்கணக்கான ஏவுகணைகள்




பாலஸ்தீன தேசத்திலிருந்து இஸ்ரவேல் தேசத்தின் தலைநகரான டெல் அவிவ் (Tel Aviv) மீது ஏவப்பட்டது. அத்தனை ஏவுகணைகளும் (Missiles) டெல் அவிவ் மீது விழுந்திருக்குமானால், அந்தப் பட்டணமே அழிந்து போயிருக்கும். ஆனால் அந்த ஏவுகணைகள் அந்தப் பட்டணத்தின் மீது தாக்காதபடி, வானிலேயே அதை அழிக்கும் புதிய பாதுகாப்பு தொழில்நுட்பத்தை (Iron Dome Defence system) கண்டுபிடித்து, வெற்றிகரமாக பயன்படுத்தித் தன்னை பாதுகாத்துக் கொண்டது இஸ்ரவேல் தேசம். இவ்வகையான பாதுகாப்பு தொழில்நுட்பத்தை முதன் முதலில் பயன்படுத்தி வெற்றி பெற்ற நாடு இஸ்ரவேல் தேசம் தான்.

## Iron dome defence system என்றால் என்ன? அது எப்படி செயல்படுகிறது என்பதை பார்ப்போம்.

**நோக்கம்** Iron Dome Defence system என்பது எதிரி நாட்டிலிருந்து அனுப்பப்படும் ஏவுகணைகள் தேசத்தை தாக்காதபடி, அதை வானிலே அழிப்பதற்காக அனுப்பப்படும் பதில் ஏவுகணைகள் ஆகும். இதை Interceptor என்றும் அழைப்பர்கள். இது தானாக இயங்கும் ஆற்றல் படைத்தது. Radar மூலம் பெறப்படும் தகவல்களை வைத்து, எதிரியின் ஏவுகணைகளை அழிக்கும் வல்லமையுள்ளது. இது எல்லா கால சூழ்நிலைகளிலும் துல்லியமாக செயல்படும்.



## Iron Dome System முக்கியமானப் பிரிவுகள்




### ரேடார் (Radar)

இந்த ரேடார் கருவியைக் குறித்து நாம் அதிகம் கேள்விப்பட்டிருப்போம். இந்தக் கருவி தான் தூரத்திலிருந்து வரும் ஏவுகணைகள் எந்த இடத்தை நோக்கி வருகிறது, என்ன வேகத்தில் வருகிறது என்று கணித்து, அந்தத் தகவல்களை கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பும்.

### BMC (Battle Management and Control unit)

ரேடார் மூலம் பெறப்படும் தகவல்கள் BMC என்னும் கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பப்படும். இந்தக் கட்டுப்பாட்டு அறையிலிருந்து Launcher என்னும் ஏவுகணைகளை இயக்கும் கருவிக்கு கட்டளை அனுப்பப்படும்.



### Launcher

ஒவ்வொரு Launcher-ல் 20 ஏவுகணைகள் இருக்கும். BMC-லிருந்து பெறப்படும் கட்டளையை வைத்து ஏவுகணைகளை எதிரியின் ஏவுகணைகளுக்கு நேராக அனுப்பி அவற்றை அழித்துவிடும்.

இஸ்ரவேல் இராணுவம் இந்தப் பாதுகாப்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்தியதினால் பெரிய உயிர் சேதமும், பொருட்சேதமும் தவிர்க்கப்பட்டது. உலக நாடுகள் அனைத்தும் இஸ்ரவேல் தேசத்தின் இந்தப் பாதுகாப்பு தொழில்நுட்பத்தைப் பார்த்து வியந்தது. தீவிரவாத அமைப்பினரும் அநேக முயற்சிகள் செய்தும், தொடர்ச்சியாக 500 ஏவுகணைகளை அனுப்பியும் அது செயல்படமால் முடங்கியது.



அன்பார்ந்த வாலிபர்களே, இந்த Iron dome defence system குறித்து வாசிக்கும் போது, நம்முடைய வாழ்விலும் கூட, நம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு (ஜெபம், வேத தியானம்) விரோதமாகவும், நம் பரிசுத்த ஜீவியத்தை கெடுக்கும் படியாகவும், பிசாசானவன் அநேக தாக்குதல்களை (ஏவுகணைகள்) நாள்தோறும் பல்வேறு வழிகளில் பலர் மூலம் நடத்தி கொண்டுதான் இருக்கிறான் என்று 1 பேதுரு 5:8, எபேசியர் 6:12,16 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம். இப்படி ஒரு தாக்குதல் தங்களுக்கு எதிராக நடக்கிறது என்று உணராமல் பாவத்திற்கும், குற்ற மனசாட்சிக்கும், சோர்வுக்கும் இடம் கொடுத்து தேவனுக்காக எழும்ப முடியாமல் தரிசனம் பெற்ற வாலிபர்கள் கூட முடங்கி கிடக்கிறார்கள் என்பது வருத்தத்திற்குரிய உண்மை. ஆனால் அதே வாலிபர்கள் தங்களுக்கு எதிராக எழும்பும் தாக்குதல்களை Iron Dome-ல் உள்ள ரேடார் கருவியைப் போல முன்கூட்டியே அறிந்து, அதை அழிக்கும்படி நம் ஜெபம் என்னும் ஆயுதத்தையும், தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்து கொண்டு அவனை எதிர்த்து நிற்போமானால், நமக்கு எதிராக எழும்பும் எந்த ஆயுதத்தையும் அழிக்கவும், அதை வாய்க்காதே போக செய்யவும் முடியும். கடைசி காலத்தில் பிசாசுக்கும் அவன் சேனைக்கும் எதிராக யுத்தம் செய்ய தெரிந்து கொள்ளப்பட்ட யுத்த தலைமுறையாகிய நாம், நம் தனிப்பட்ட வாழ்க்கைக்கு விரோதமாக எழும்பி வரும் சாத்தானின் தந்திரங்களை மேற்கொண்டு ஜெயித்தால் தான், நம் தேசத்திற்கு விரோதமாகவும், ஆத்துமாக்களுக்கு விரோதமாகவும் கிரியை செய்யும் சாத்தானின் திட்டங்களையும், தந்திரங்களையும் அழித்து ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய முடியும் என்பதை உணர்ந்து செயல்படுவோம். பராக்கிரமசாலியே! பராக்கிரமமுள்ள தேவன் உன்னோடே இருக்கிறார்.

**“எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது”(2 கொரி. 10:4)** ●

அலசல்: ரவி



# கிறிஸ்தவ வாலிபர்கள் எதிர்கொள்ளும் கேள்விகள்!

அன்பான வாலிபர்களே! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதக் கட்டுரையில், வாலிபப் பிள்ளைகளைத் தடுமாறச் செய்யும் கேள்விகளின் வரிசையில் முதல் கேள்வியாக கடவுள் இருக்கிறாரா? (Does God Exist?) என்கிற கேள்விக்கானப் பதிலை ஆதாரங்களின் அடிப்படையில் ஆராய்ந்தோம். இம்மாதக் கட்டுரையில் அக்கேள்விகளின் வரிசையில் இரண்டாவதாக, "உலகத்தில் எத்தனையோ கடவுள்களும், மதங்களும் இருக்க, உன்னுடைய கடவுளாகிய இயேசு கிறிஸ்துவும் கிறிஸ்தவமும் தான் சரியானது என்று எந்த ஆதாரங்களின் அடிப்படையில் கூறுகிறாய்?" இந்தக் கேள்விக்கானப் பதிலை, வேதத்தின் அடிப்படையிலும் வரலாற்றின் அடிப்படையிலும் நாம் இக்கட்டுரையில் ஆராய்வோம்.

உலகத்திலுள்ள மக்கள் அநேக கடவுள்களையும், மதங்களையும் பின்பற்றுகிறார்கள். குறிப்பாக, நம் தேசமாகிய இந்தியா பண்முக வழிப்பாடுகளுக்கு பெயர் பெற்றது. "எல்லா பாதைகளும் கடவுளிடம்தான் செல்கிறது" என்கிறதானக் சொற்றொடரை நாம் கேட்டிருப்போம். சில நேரங்களில் அது உண்மை என்றுகூட நம்பியிருப்போம். ஆனால் மேற்கூறியது போல உலகத்தில் அநேக கடவுள்கள் பின்பற்றப்பட, அக்கடவுள்களின் அல்லது மதங்களின் தத்துவங்களும், கோட்பாடுகளும் ஒன்றுக்கொன்று மிகவும் வேறுபட்டிருக்க, எல்லாப் பாதைகளும் ஒரு கடவுளிடமே செல்கிறது என்கிற வாக்கியம் எப்படி சரியாக இருக்க முடியும். உதாரணமாக, இந்து மதம், நாம் அனைவரும் அந்த ஒரே பரமாத்மாவின் அங்கமாக இருந்து, மரித்தவுடன் அந்தப் பரமாத்மாவோடு இணைந்து விடுகிறோம் என்று சொல்கிறது. பௌத்த மதம், கடவுள் என்கிற ஒன்று இல்லை, நமக்கு சுயம் (Self) என்று ஒன்று இல்லை, நம்முடைய கர்ம பலனை ஒவ்வொரு பிறவியிலும் நாம் நிறைவேற்றி இறுதியாக நாம் மறைந்து விடுகிறோம் என்று செல்கிறது. இஸ்லாம் ஒரே ஒரு தேவன் இருக்கிறார், அவரோடு நமக்கு ஒரு தனிப்பட்ட உறவு இருக்க முடியாது. நாம் மரித்து பரதீஷ்க்கு சென்றாலும் அங்கேயும் அவர் இருக்க மாட்டார் என்று சொல்கிறது. ஆகவே இவ்வாறாக ஒவ்வொரு மதங்களும் ஒன்றுக்கொன்று மிகவும் வேறுபட்டிருக்க, இம்மதங்கள் எல்லாம் ஒரே கடவுளிடம் செல்கிறதென்றோ, இவையெல்லாம் சத்தியம் என்றோ சொல்வது கூடாதக் காரியம். அப்படியென்றால், கிறிஸ்தவம் தான் மெய்யான மதம் என்றும், இயேசு கிறிஸ்துதான் மெய்யான தேவன் என்றும் நீங்கள் எப்படிச் சொல்ல முடியும் என்கிற கேள்விக்கு, ஒன்றிரண்டு முக்கியமான ஆதாரங்களோடு கீழே பதில் தருகிறேன். ஒருசிலர், கிறிஸ்தவம் உலகிற்கு வந்து 2000 வருடங்களே ஆகிறது. இந்து மதம் அதிலும் பழமையான மதம், ஆகவே இந்து மதமே மெய்யான மதமாக

இருக்க முடியும் என்பார்கள். இது ஒரு தவறான நிலைப்பாடு. நண்பர்களே, இந்தத் தர்க்கத்தின்படி பார்த்தால், இந்து மதம் வருவதற்கு முன்னால் மனிதர்கள் இயற்கையை வழிப்பட்டுக் கொண்டு வந்தார்கள். ஆகவே இயற்கை வழிபாடே மெய்யான வழிபாடு என்றல்லவா பொருளாகும். ஆகவே எந்த மதம் மெய்யான மதம் என்பதை சத்தியத்தின்படி சோதித்தறிய வேண்டும்.



**முதலாவது கேள்வி,** இயேசு கிறிஸ்துதான் மெய்யான தேவன் என்பதை நாம் எப்படி சோதித்தறியலாம்? வேதம் சொல்கிறபடி அவர் ஒரு மனிதனாக பூமியில் 2000 வருடங்களுக்கு முன்பு சுற்றித் திரிந்தாரா? யூத சரித்திர வல்லுநாரான பிளேவியஸ் யோசப்பஸ் (Flavius Josephus) கி.பி. 96ம் ஆண்டு எழுதிய யூதர்களைக் குறித்து எழுதிய வரலாற்றுச் சுவடுகளில் இயேசுவை குறிப்பிட்டிருக்கிறார். அதுபோல, அதேக் காலக்கட்டத்தில் ரோம அரசியலவையில் முக்கிய பொறுப்பு வகித்த பிளைநி மற்றும் டசிட்டஸ் (Pliny & Tacitus) என்பவர்கள் பொந்தியு பிலாத்து என்னும் தேசாதிபதியின் ஆட்சிக்காலத்தில் இயேசு கிறிஸ்து கொல்லப்பட்டார் என்று மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். இவைகள் இரண்டுதான், ஆனால் இதுபோல இயேசு இப்பூமியில் வாழ்ந்தார் என்பதற்கு அநேக ஆதாரங்கள் இருக்கிறது.



**இரண்டாவது கேள்வி**, இயேசு வாழ்ந்தபொழுது, அவர் தன்னைக் குறித்தும், தன் மரணத்தைக் குறித்தும், உயிர்த்தெழுதலைக் குறித்தும் என்ன கூறினார்?

இயேசு, "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்" (யோவான் 10:30). அதுபோல, மத்தேயு 16:16,17ல் சீமோன் பேதுரு அவரை ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று சொன்னபோது அவர் அதை அங்கீகரித்தார். ஆகவே தான் தேவனுடைய குமாரன் என்பதையும், தானும் பிதாவும் ஒன்றாய் இருக்கி றோம் என்கிற சத்தியத்தையும் அவர் உரிமை கோருகிறார். அதே மத்தேயு 16ம் அதிகாரத்தில் தான் எப்படியான ஓர் மரணத்தை அடைவார் என்பதையும், மூன்றாம் நாளில் எப்படி உயிர்த்தெழுவார் என்பதையும் குறித்துச் சொல்கிறார். யோவான் 2ம் அதிகாரத்தில், தன் சரீரமாகிய ஆலயத்தை நீங்கள் இடித்துப் போடுங்கள், நான் மூன்று நாளைக்குள்ளே அதை எழுப்புவேன் என்று சொல்கிறார். இப்பொழுது நாம் ஆராய வேண்டியது என்னவென்றால், அவரே மெய்யான தேவன் என்பது உறுதியாகிறது. இல்லையென்றால், அவர் ஒரு சாதாரண மனிதன் தான் என்பது உறுதியாகும். ஆனால் அவர் மரித்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கு போதுமான ஆதாரங்களுண்டு. அதில் சிலவற்றை பார்ப்போம்.

இயேசு சிலுவையில் அறையப்பட்டு அவருடைய சரீரம் அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பின் கல்லறையில் வைக்கப் பட்டதென்கிற வரலாற்றுக் குறிப்புண்டு. அந்தக் கல்லறை இன்றும் காலியாகவே உள்ளது. உயிர்த்தெழுந்த இயேசுவை நேரில் பார்த்த ஏறக்குறைய 500 சாட்சிகள் உண்டு. மரித்துப்போன ஒரு மனிதனுக்காக யாரும் தங்கள் உயிரைக் கொடுக்கதுணியமாட்டார்கள். முதலாம் நூற்றாண்டின் வரலாற்றை நாம் படித்தோமானால், எத்தனை சீஷர்களும் விசுவாசிகளும் தங்களுடைய விசுவாசத்திற்காக ரோமர்களின் கையால் மடிந்தார்கள் என்பது நமக்குத் தெரியவரும். ஒரு பொய்க்காக யாரும் தங்கள் உயிரை இழக்கமாட்டார்கள். கடைசியாக, இயேசுவை வெறுத்த பவுல் மற்றும் இயேசுவின் சகோதரன் யாக்கோபு பின்னாளில் அவருடைய தீவிர விசுவாசிகளாய் மாறிய குறிப்பு வேதத்திலும் உள்ளது, வரலாற்றுச் சுவடுகளிலும் உள்ளது. பவுல் தான் உயிர்த்தெழுந்த இயேசுவை நேரில் கண்டதாகக் கூறுகிறார். ஆகவே என் அன்பு நண்பர்களே, இயேசு தன்னைக் குறித்துச் சொன்ன ஒவ்வொரு காரியத்தின் நிறைவேறுதலுக்கும் போதுமான ஆதாரங்கள் உள்ளபடியால், அவரே மெய்யானத் தேவன் என்பதை நாம் தெளிவாக பார்க்க முடிகிறது ●





எச்சரிப்பின் செய்தி: சதீஷ்

# இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாகுங்கள்!

## வானில் நிகழும் மாற்றங்கள்!

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு வானத்திலும் பூமியிலும் பல அடையாளங்கள் தோன்றும். இவையெல்லாம் அவர் வருகைக்கு முன்பு கட்டாயம் நடக்கும். வானம் சிவப்பு நிறம் ஆகும் போதெல்லாம் மனதில் இயேசு கிறிஸ்துவின் வருகையை நினைத்துக் கொள்ளுங்கள். சமீப காலங்களில் வானத்திலே தேவ தூதர்களையும், சந்திரன் இரத்த சிவப்பானதையும், உலகின் பல நாடுகளில் எக்காளச் சத்தங்களையும், பலர் பார்த்தையும், கேட்டதையும் நீங்கள் படித்திருப்பீர்கள். இவையெல்லாம் இயேசுவின் வருகைக்கு முன்பாக அவர் சொன்ன அடையாளங்கள்தான். “...**வானத்திலிருந்து பயங்கரமான தோற்றங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாகும்**” **(லூக்கா 21:11)** என்ற வேத வசனம் மிகத் துல்லியமாக நாம் வாழும் காலத்தில் நிறைவேறிக் கொண்டு இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.





சூரியனில் தோன்றும் கருப்பு புள்ளிப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். கருப்புப் புள்ளி என்றால் அது உண்மையில் கருப்பான நிறத்திலுள்ள புள்ளி அல்ல. சூரியனின் மேற்பரப்பில் மற்ற இடங்களைக் காட்டிலும் ஓரிடத்தில் வெப்பம் குறைவாக இருந்தால் அந்த இடம் நமக்கு கரும்புள்ளியாகத் தெரிகிறது. கடந்த 1989ஆம் ஆண்டு சூரியனில் ஏற்பட்ட புயல் காரணமாக கடும் மின்சார அதிர்வு ஏற்பட்டது. சூரிய புயல் உருவானதால் அதில் இருந்து வெளிப்பட்ட சக்தி வாய்ந்த காந்த புலமானது பூமியை கடந்து சென்ற போது மத்திய மற்றும் வடக்கு கனடா பகுதிகளில், 2 நாட்களுக்கு வானில் பிரகாசமான வெளிச்சம் தோன்றியது. இதுபோல தோன்றிய சூரியப் புயலால் கடந்த 2002ஆம் ஆண்டில் 30க்கும் மேற்பட்ட செயற்கை கோள்கள் சேதமடைந்து உள்ளன. பூமியில் ஏற்படும் விபரீதமான காலநிலை மாற்றங்கள் போலவே விண்வெளியிலும் காலநிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன. சூரியனிலிருந்து பூமிக்கு வரும் வெப்பம் கொஞ்சம் அதிகரித்தாலும்கூட அது பூமிக்கு ஆபத்தை ஏற்படுத்தி விடும்.

சூரியனின் மேற்பரப்பில் மிகப்பெரிய ஓட்டை விழுந்திருப்பதையும் அதன் வழியாக அதிவேகத்தில் வெளியேறும் சூரிய காற்று பூமியை சுற்றிக் கொண்டிருக்கும் செயற்கைக் கோள்கள் மற்றும் சூரிய மின் சக்தி கருவிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது என நாசா தெரிவித்துள்ளது. சூரியனின் மேற்பரப்பில் இருந்து வெப்பக்காற்று வெளியேறுவது அடிக்கடி நிகழும் சாதாரண நிகழ்வுதான். என்றாலும், இந்த ஓட்டை வழியாக அதிவேகத்தில் சூரியக்காற்று வெளியேறி வருகிறது என விண்வெளி வானிலை ஆராய்ச்சி மையம் கூறுகிறது. பூமியில் ஏற்படும் மாற்றங்களைக் காட்டிலும் வானில் ஏற்படும் மாற்றங்கள்தான் இன்று





உலகளவில் பரவலாகப் பேசப்படுகிறது. இதனாலே பூமியில் மழை, வெள்ளம், சுனாமி, பருவநிலை மாற்றங்கள் ஏற்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

1691ஆம் ஆண்டுக்கு முன்பு வரை பூமிக்கு மேலே ஒரு நிலா மட்டுமே இருந்து வந்தாக நம்பப்பட்டது. ஆனால் போலந்து நாட்டின் வானியல் ஆய்வாளர் காசி மிர்ஸ் கோர்திலெவஸ்தி சொன்ன பிறகுதான் பூமிக்கு மேலே மேலும் சில நிலாக்கள் இருப்பது குறித்து விவாதங்கள் எழுந்தன. பூமியில் இருந்து நிலா இருக்கும் 2 லட்சத்து 50 ஆயிரம் மைல் தொலைவில் மர்மமான மேகக்கூட்டம் இருப்பதாக விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஆனாலும் தொடர்ந்து இது பற்றி ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

விண்வெளியில் ஆயிரக்கணக்கான நட்சத்திர மண்டலங்கள் காணப்படுகின்றன. நட்சத்திரங்களின் எண்ணிக்கை கோடிகளைத் தாண்டும் என்றும் கணிக்கப்பட்டு வருகிறது. வானில் சூரியன், சந்திரனைத் தாண்டி ஏராளமான கோள்களும் இருக்கின்றன. இவைகளைத் தாண்டி கோடிக் கணக்கான நியூட்ரான் நட்சத்திரங்கள் உள்ளன. இவற்றில் ஏற்படும் மாற்றங்கள் பூமியிலும் மாறுதல்களைக் கொண்டு வருகிறது என்று விண்வெளி ஆய்வாளர்கள் கூறி வருகின்றனர்.

வானில் அடிக்கடி நிகழும் இத்தகைய மாற்றங்கள் இயேசு கிறிஸ்துவின் வருகையின் அடையாளத்திற்கு ஆரம்பமே. இதைக் காட்டிலும் பெரிய மாற்றங்கள் வானில் நிகழும், **"அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்"** (மத். 24:29). இவைகளெல்லாம் நடக்கும்போது மனுஷகுமாரன் வானத்தில் தோன்றுவார். அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட வர்களை வானத்தின் ஒரு முனையிலிருந்து மறுமுனை மட்டும் நான்கு திசைகளிலிருந்து கூட்டிச் சேர்ப்பர்.

எனக்கு அன்பான வாலிபர்களே! வானிலும் பூமியிலும் நிகழும் மாற்றங்களை நம் கண்களால் பார்த்து கொண்டுத்தான் இருக்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர் வருகைக்கு முன்பாக என்னவெல்லாம் சம்பவிக்கும் என்று சொன்னாரோ, அவை அனைத்தும் நாம் வாழும் காலத்தில் நிறைவேறிக் கொண்டு வருகிறது. நீங்கள் நம்பினாலும் சரி நம்பாவிட்டாலும் சரி இயேசு கிறிஸ்து சீக்கிரமாய் இந்தப் பூமியை நியாயம் தீர்க்க வரப்போகிறார். எனவே அவர் வருகைக்கு ஆயத்தமாகி அவரைச் சந்திக்க ஆயத்தப்படுங்கள். 'நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள்; இதோ, எல்லாவற்றையும் முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்' (மாற்கு 13:23) என்று ஆண்டவர் உங்களை எச்சரிக்கிறார் ●

இயேசுவின் வருகையைக் குறித்த இன்னொரு அடையாளத்தை அடுத்த இதழில் பார்ப்போம்.

# செய்திகள்!

## அண்டார்ட்டிகாவில் நகரும் பனி அடுக்கு

அண்டார்ட்டிகா மனிதர்கள் மிகக் குறைவாக வசிக்கும் மிகப் பெரிய கண்டம். இங்கு கோடை காலத்தில் அதிகபட்சமாக பத்தாயிரம் பேர் இருப்பார்கள். இதிலும் பெரும்பகுதியினர் ஆய்வாளர்கள். இவர்களைத் தவிர கோடிக்கணக்கான பெங்குயின்களும் கொஞ்சம் பனிக்கரடிகளும், ஜீல்களும் மட்டுமே வசிக்கின்றன. மற்றபடி எங்கும் பனி பனிப்பாறைகள் இதுதான் இக்கண்டத்தின் இயல்பு. சமீபத்தில் இங்கு ஒரு பனிப்பாறை திடீரென உடைந்தது பெரும் பதற்றத்தை உருவாக்கியிருக்கிறது. அண்டார்ட்டிகாவின் ரோன் பனி அடுக்கிலிருந்து சுமார் 4,320 சதுர கிலோமீட்டர் (சென்னைப் பெருநகரை விடப் பத்து மடங்கு பெரியது) பரப்பளவு கொண்ட A76 என்னும் பனிப்பாறை உடைந்து நகரத்தொடங்கியிருக்கிறது. ஆனால் ஆய்வாளர்கள் இது குறித்து அச்சம் தேவையில்லை என்றிருக்கிறார்கள். 'இது இயற்கையாகவே நிகழ்ந்துள்ளது. இதற்கும் காலநிலை மாற்றத்துக்கும் சம்பந்தமில்லை. இது மிதக்கும் பனிப்பாறை என்பதால் கடல் நீர் மட்டம் உயராது' என்று அறிவித்திருக்கிறார்கள். 'அதிகம் வளர்ந்த நகம் வெட்டப்படுவது போன்ற இயல்பான நிகழ்வு இது' என்கிறார் ஆய்வாளர் கிறிஸ்டோபர் ஷூமன்.




இந்தக் கண்டத்தை முழுவதுமாக (98%) பனிப் பாறைகள்தான் மூடியிருக்கின்றன. உலகின் 61% சுத்த நீர், இந்தப் பாறைகளுக்குள் தான் உறங்கிக்கொண்டிருக்கின்றன. ஒருவேளை இவை முழுமையாக உருகினால், உலகின் கடல் நீர் மட்டம் 60 மீட்டர் வரை உயரும் அபாயம் உண்டு. இந்த அபாயச் செய்திகளையெல்லாம் புறந்தள்ளி விட்டுப் பார்த்தால், அண்டார்ட்டிகா என்பது ஒரு பாலைவனம். பல்லாயிரம் ஆண்டுகளாக அங்கு விழும் பனி, அந்தக் கண்டத்தை அப்படி உருமாற்றி வைத்திருக்கிறது.

ரோன் பனி அடுக்கிலிருந்து இப்படிப் பனிப்பாறைகள் உடைவதை கால்விங் என்கிறார்கள் ஆய்வாளர்கள். நிலத்தோடு ஒட்டியிருக்கும் இந்தப் பனிப்பாறைகள் நீர் நிலைகளைத் தொடும்போது, அதன் சமநிலை கேள்விக்குள்ளாகிறது. அப்போது நிலத்தைச் சாராமல் விலகி இருக்கும் பகுதிகள் உடைந்து பனிப்பாறைகளாக மிதக்க ஆரம்பிக்கின்றன. ஃபில்ச்னர் - ரோன் பனி அடுக்கு, வெட்டல் கடலுக்கு அருகிலேயே இருப்பதால் அதில் ஒவ்வொரு ஆண்டும் நூறு மீட்டர் அளவிலான கட்டிகள் உடையக்கூடும். தற்போது நடந்திருப்பது ஒரு பெரும்பிளவு, அவ்வளவே என்கிறார்கள். - *தினகரன் 06 ஜூன் 2021*

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை




கீழே வேதத்தில் உபசரிக்கும் மக்களைக் குறித்த கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. சரியான விடையைக் கண்டறிந்து, வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள்

**15.07.2021**

## வினாக்கள்

1 ஓர் அந்நிய மனிதனுக்குக் குடிக்கத் தண்ணீரும், அவன் ஒட்டகங்கள் குடித்து தீருமளவும் தண்ணீர் வார்த்து, உபசரித்த பெண்ணின் பெயரென்ன?

2 அப்பொழுது தான் கிணற்றின் அருகே அறிமுகமான அந்நியனை உபசரித்த, ஏழு குமாரத்திகளுள்ள ஆசாரியன் யார்?

3. கப்பல் சேதத்திலிருந்து மெலித்தா தீவின் கரையை அடைந்த அந்நியர்களை அத்தீவிலுள்ள யார் ஏற்றுக்கொண்டு உபசரித்தது?

4 மூன்று அந்நிய புருஷர்களை வரவேற்று, அவர்களை உபசரிக்கும் நோக்கோடு மர நிழலில் சாய்ந்திருக்கும்படி சொன்னது யார்?

5 ஒரு விதவையின் உபசரணையை பெற்றுக்கொள்ளும் சாறிபாத் என்னும் ஊருக்கு போகச் சொல்லி கேட்கப்பட்டது யார்?

6 பரதேசி வீதியிலே இராத்தங்கினதில்லை; வழி போக்கனுக்கு என் வாசல்களைத் திறந்தேன் என்று சொன்னவன் யார்?

7 தங்கள் கால்களைக் கழுவிக்கொள்ளும்படியாகவும், இராத்தங்கும் படியாகவும், இரண்டு தூதர்களைத் தன் வீட்டிற்கு அழைத்த மனிதன் யார்?

8 ஒரு தகப்பனுக்கும், தனக்கு இருந்த நட்புறவினாலே அவனுடைய மகனைத் தன் வீட்டிலே வைத்து உபசரித்த மனிதன் யார்?

9 அவ்வப்போது வந்து போய்க் கொண்டிருந்த தீர்க்கதரிசிக்கு உபசரணைகள் செய்த மிகவும் பிரசித்திபெற்ற பெண்மணியின் பெயரென்ன?

10 வாடகைக்கு எடுக்கப்பட்ட வீட்டில் தங்கி வருவோர், போவோரை ஏற்றுக்கொண்ட மனிதன் யார்?

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |
| 3 | | | | | | | |
| 4 | | | | | | | |
| 5 | | | | | | | |
| 6 | | | | | | | |
| 7 | | | | | | | |
| 8 | | | | | | | |
| 9 | | | | | | | |
| 10 | | | | | | | |

## கடந்த மாத விடைகள்

1 வெண்மையாக்கவும், கறுப்பாக்கவும் (மத். 5:36)
2 குளிருமின்றி, அனலுமின்றி (வெளி. 3:16)
3 நிறைவானது, குறைவானது (1 கொரி. 13:10)
4 தேவனுக்கும், உலகபொருளுக்கும் (மத். 6:24)
5 வெளிச்சமும், இருளும் (சங். 139:12)
6 தீமையை, நன்மையை (ரோமர் 12:9)
7 சிறிய நெருப்பு, பெரிய காட்டை (யாக்.3:5)
8 பகலுக்குப் பகல், இரவுக்கு இரவு (சங். 19:2)
9 புதிய, பழைய (லூக்கா 5:36)
10 ஐசுவரியவானும், தரித்திரனும் (நீதி. 22:2)

### கடந்த மாத வெற்றியாளர்

சாந்தி,
காஞ்சிபுரம்
அவர்களை
வாழ்த்துகிறோம்.

### விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

**Jesus Redeems Youth Ministries,**
**Nalumavadi, Thoothukudi Dist - 628 211.**
**Cell: 9750955547 | Tel: 04639- 353333 | youth@jesusredeems.org**

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25-06-2021.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.

# உங்களின் கருத்து



இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் மூலமாக வாலிபர் உலகம் பத்திரிக்கை மாதந்தோறும் வெளியிட்டு வருகிறோம். அநேகர் சந்தா செலுத்தி சந்தாதாரர்களாக இருக்கிறீர்கள். ஒவ்வொரு மாதமும் பலவிதமான தலைப்புகளில் கட்டுரைகள், சாட்சிகள் மற்றும் பல ஆலோசனைகளைப் படித்து வருகிறீர்கள். நீங்கள் படித்ததில் எந்தப் பகுதி உங்களோடு பேசியது அல்லது எந்தப் பகுதி பிடித்திருக்கிறதோ அந்தப் பகுதியை டிக் ☑ செய்து, அதன் மூலம் நீங்கள் கற்றுக்கொண்டது அல்லது தேவன் உங்களோடு பேசியதைச் சுருக்கமாக இரண்டு வரிகளில் எழுதி இந்தப் பக்கத்தை போட்டோ எடுத்து கீழேக் கொடுக்கப்பட்டுள்ள எண்ணிற்கு Whats app-ல் தெரியப்படுத்தவும். அதுமாத்திரமல்லால் உங்களது கருத்துக்களையும் எங்களுக்குத் தெரியப்படுத்தலாம்.



☐ தலைவாசல் ☐ Heart Beat ☐ முகப்பு செய்தி ☐ சாட்சி
☐ எச்சரிப்பின் செய்தி ☐ சாதனை ☐ சிந்தனை சிதறல் ☐ வேத ஆராய்ச்சி ☐ அலசல்
☐ செய்தி ☐ ஜெபக்கையேடு ☐ சிறப்புக் கட்டுரை ☐ வேதாகம புதையல் வேட்டை ☐ செய்திகள்





..............................................................................................................

..............................................................................................................

+91 - 9750955547